**உள்ளடக்கம்** **பக்கம்**


| | |
|---|---|
| கூட்டுத்தாபன தகவல்கள் | 01 |
| லக்சல காட்சியறைகள் வலையமைப்பு | 02 |
| நோக்கு மற்றும் செயற்பணி | 03 |
| செயலாற்றுகை மீளாய்வு – 2015 | 04-13 |
| பணிப்பாளர் சபை | 14-16 |
| சிரேஷ்டமுகாமைத்துவக் குழு | 17 |


**நிதி அறிக்கைகள்**


| | |
|---|---|
| நிதி நிலமைக் கூற்று (லக்சல+கருத்திட்டங்கள்+அபேகம) | 18 |
| விரிவான வருமானக் கூற்று (லக்சல+கருத்திட்டங்கள்+அபேகம) | 19 |
| நிதிப் பாய்ச்சல் கூற்று | 20 |
| முதலீட்டுப் பங்குகளின் மாறுதல்கள் பற்றிய கூற்று | 21 |
| நிதி நிலமைக் கூற்று– லக்சல | 22 |
| விரிவான வருமானக் கூற்று- லக்சல | 23 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - லக்சல | 24-30 |
| நிதி நிலமைக் கூற்று– கருத்திட்டம் | 31 |
| விரிவான வருமானக் கூற்று– கருத்திட்டம் | 32 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - கருத்திட்டம் | 33-34 |
| உற்பத்திக் கணக்கு – கருத்திட்டம் | 35 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள–கருத்திட்டம் | 36 |
| நிதி நிலமைக் கூற்று –கருத்திட்டம் | 37 |
| இலாபம் அல்லது நட்டம் பற்றிய கூற்று– அபேகம | 38 |
| நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் - அபேகம | 39-40 |
| நிதிக் கொள்கைகள் | 41-54 |
| நிதி நிலமை –கைப்பணிப் பயிற்சி | 55 |
| கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை | 56-80 |

# நிறுவனத் தகவல்கள்

## நிறுவனத்தின் பெயர்

இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை – லக்சல

**நியதிச்சட்ட நிலமை**

1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேசிய கைப்பணிச் சபை மற்றும் இணைக்கப்பட்ட நிறுவன சட்டம்

**பிரதான அலுவலகம்**

இல– 215, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு – 07

தொலைபேசி இலக்கம் 011-2055717 / 011- 2055501

தொலை நகல் - 011 -2594872 / 011- 2680928

**சந்தைப்படுத்தல் - விசாரணைகள்**

மின்னஞ்சல் - info@laksala.gov.lk

இணையத்தளம் - www.laksala.lk

**சந்தைப்படுத்தல் தகவல்கள்**

தொலைபேசி– 011-2680925

இணையத்தளம் - info@laksala.gov.lk

**கணக்காய்வு**

கணக்காய்வாளர் திணைக்களம்

**வங்கிகள்**

இலங்கை வங்கி

மக்கள் வங்கி

இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை

**லக்சல காட்சியறைகளின் வலையமைப்பு**

| | | | தொலைபேசி |
|---|---|---|---|
| 1. | கோட்டை | இல 60, யோரக் வீதி, கொழும்பு 01 | 0112323514 |
| 2. | தும்முல்லை | இல, 215, பௌத்தாலோக்க மாவத்தை, தும்முல்ல, கொழும்பு.07 | 0112580579/5846168 |
| 3. | கண்டி | இல 05, சங்கராஜ மாவத்தை கண்டி | 0812222087 |
| 4. | கட்டுபெத்த | இல,282, காலி வீதி, கடுபெத்த, மொறடுவ | 0112605600 |
| 5. | நூதனசாலை | நூதனசாலை கெலரி கெபே, நூதனசாலை வலாகம்,கொழும்பு 07 | 0112698263 |
| 6. | பத்தரமுல்லை | ஜனகலா கேந்திரம், பெலவத்த, பத்தரமுல்லை | 0112786026 |
| 7. | ரேஸ்கோர்ஸ் | மினி ஸ்டான்ட், குதிரைப் ரேஸ்கோர்ஸ் உலா, ரீட் அவெனியு, கொழும்பு 07 | 0112677772 |
| 8. | வெலிபென்ன 1 | வெலிபன்ன இடைத் தங்கல், தெற்கு அதிவேகப் பாதை, சேவை பகுதி, அங்காடி ‘‘ஏ’’ ஏ4 மற்றும் ஏ 5 | 0342241607/8 |
| 9. | வெலிபென்ன 2 | வெலிபன்ன இடைத் தங்கல், தெற்கு அதிவேகப் பாதை,சேவை பகுதி, அங்காடி ‘‘பீ’’ ஏ5 மற்றும் ஏ 6 | 0342241620/21 |
| 10. | காலி | இல74/1, காலி வீதி, காலி | 0912222783 |
| 11. | பின்னவல | யானைகள் சரணாலயம் (வெளியேறுகை)பின்னவல | 0352256015 |
| 12. | பேராதனை | இல 14, தாவரவியல் புங்கா, பேராதனை | 0812389253/2389263 |
| 13. | கட்டுநாயக்க | 54D புறப்படும் இடமாற்றப் பகுதி, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க | 0112260167 |
| 14. | வாகொல்ல | பின்னவலை விலங்குகள் புங்கா, ரம்புக்கன, பின்னவல | 0352264755 |

## செயல்நோக்கு

இலங்கையில் பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் சந்தையில் முன்னோடியாக திகழுதல்

## செயற்பணி

பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுச்சின்னங்கள் உற்பத்தித் துறையின் விருத்திக்கான ஆற்றல்களை விரிவுபடுத்தி, கிராமிய உற்பத்திகளுக்கு பரந்துபட்ட சந்தை வாய்ப்புக்களை ஏற்படுத்தி சுற்றுலாத்துறைக்கு உயர் ஒன்று சேர்க்கப்பட்ட பெறுமானத்தை வழங்கி வர்த்தக ரீதியில் பயனுறுதிமிக்க பெறுப்புள்ள சமூக நிறுவனமாக செயற்படல்

## எமது முக்கிய செயற்பாடுகள்

- வாடிக்கையாளர்களை மிகவும் சந்தோஷப்படுத்தல்
- பெறுமதியை ஏற்படுத்தி கிராமிய சமூகத்திற்குள்ளால் பெறுமானங்களை பரிமாற்றம் செய்தல்
- சிறந்த வாடிக்கையாளர்களின் தெரிவுகளுக்கு பன்முகப்பட்ட சந்தர்ப்பங்களை வழங்குதல்
- தரம்,நம்பகத்தன்மை மற்றும் விலைக்கான பெறுமதியை வழங்குதல்

## 2015 ஆம் ஆண்டின் செயலாற்றுகை மீளாய்வு

### பின்னணி

இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை – லக்சல நிறுவனத்தின் 2015 ஆம் ஆண்டுக்கான செயலாற்றுகை மீளாய்வு அறிக்கையை மகிழ்ச்சியுடன் முன்வைக்கின்றேன். உள்நாட்டு சிறு கைத்தொழிலாளர்களுக்கு தேசிய மற்றும் சர்வதேச சந்தைக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன் லக்சல நிறுவனம் 1964 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. 1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேசிய சிறு கைத்தொழில் சபை இணைந்த நிறுவனச் சட்டத்தின் கீழ் இலங்கை சிறு கைத்தொழில் சபை என்ற பெயரில் நிறுவப்பட்டுள்ளது. லக்சல நிறுவனம் இத்துறையில் அரசாங்கத்திற்கு சொந்தமான மிகப் பழைமையான மற்றும் பரந்த விற்பனை வலையமைப்பை கொண்ட நிறுவனமாக மாறியுள்ளது.




### புதிய போக்கு

தற்போது நாட்டினுள் நிலவும் அமைதியான சு‘ழல் காரணமாக உல்லாசப் பயணிகளுக்கு இலங்கை பொருத்தமான தீவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதன் மூலம் லக்சல நிறுவனத்தின் வியாபார நடவடிக்கைகளும் முன்னேற்றமடைந்துள்ளன. சுற்றுலாத்துறை அமைச்சினால் மேற்கொள்ளப்படும் சர்வதேச மட்டத்திலான பாரிய விளம்பரம் மற்றும் விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகள் காரணமாக 2016 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் உல்லாசப் பயணிகளின் வருகை 2.5 மில்லியன் ஆக அதிகரிக்கும். அதற்கு இணைவாக இந்த உல்லாசப் பிரயாணிகளுக்கு தேவையான உள்நாட்டு பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னனங்களின் சந்தையும் விரிவடையும். எனவே, லக்சல நிறுவனத்திற்கு பரந்த சந்தை வாய்ப்பு கிடைக்கவுள்ளது.

### மூலோபாய பிரவேசம்

ஆரம்பிக்கப்பட்ட மறுசீரமைப்பு நடவடிக்கைகள் தனது விற்றுமுதலையும் இலாபத்தையும் அதே போன்று நிலைபேறான நிலமையை தொடர்ந்தும் பேணிக்கொள்வதற்கு தேவையான நுகர்வோரையும் கவர்ந்ததோடு தேவைக்கேற்ப மற்றும் கேள்விக்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதும் உறுதுணையாக அமைந்தன. அதாவது,

- தமது விற்பனைப் பொருட்களை விரிவு படுத்தி புதிய சந்தை வாய்ப்பை பெறுதல் (Category Expansion).
- அடையாள முத்திரை(Branding) ஊடாக நிறுவனத்தின் பெயரை சந்தையில் நிறுவுதல்.
- உபசார வாடிக்கையாளர் சேவைக்கு ஏற்ற விதத்தில் ஊழியர்களுக்கு மத்தியில் சிறந்த எண்ணப்பாட்டை கட்டியெழுப்புதல்.
- இணையத்தளத்தின் ஊடாக லக்சல பொருட்களை கொள்வனவு செய்யும் வசதியை மேலும் விரிவுபடுத்தல் (Online sales facilities)
- இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகம் போன்ற நிறுவனங்கள் தனியார்துறை சுற்றுலா நிறுவனங்களுடன் எப்பொழுதும் தொடர்புகளைப் பேணி லக்சல காடசியறைக்கு சுற்றுலாப் பயணிகளை அழைத்துவருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

லக்சல வியாபாரப் பெயரின் கீழ் அறிமுகப்படுத்தப்பட்டு லக்சல நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படும் சகல பொருட்களையும் விரிவுபடுத்தி அவற்றின் தரத்தை மேலும் அதிகரித்து பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்களை உள்நாட்டு வெளிநாட்டு உல்லாசப் பயணிகளுக்கு மற்றும் நுகர்வோருக்கு இலகுவாக பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேலும் விரிவுபடுத்தப்படும். அதற்கிணங்க மறுசீரமைக்கப்பட்ட லக்சல நிறுவனத்தில் மிகவும் தரம் வாய்ந்த நவ நாகரீக பொருட்கள் பல விற்பனைக்கு விடப்படும். இலங்கையில் பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் விற்பனையில் ஒரேயொரு அரசாங்க மற்றும் பிரதான வர்த்தக நிறுவனமாக உள்ள லக்சல நிறுவனம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நுகர்வோரின் உள்ளங்களை கவர்வதற்கு தேவையான விற்பனை ஊக்குவிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான திட்டங்களை முன்னெடுத்துள்ளது.

**வியாபார சின்னத்தின் கீழ் நிறுவனத்தின் பெயரை சந்தையில் நிறுவுதல்**

**உபசார நுகர்வோர் சேவைக்கு ஏற்ற விதத்தில் ஊழியர்களுக்கு மத்தியில் சிறந்த எண்ணப்பாட்டை கட்டியெழுப்புதல்.**

லக்சல நிறுவனம் தனது விற்பனை காட்சியறைகளை தற்போதைய சந்தைக்கு ஏற்ற விதத்தில் மிகவும் உயர்ந்த தரத்தில் பேணிவருகின்றது. அதற்கமைய லக்சல காட்சியறைகள் நவீனமயப்படுத்தப்பட்டு நுகர்வோரை கவரும் விதத்தில் பேணப்பட்டுவருவதோடு, லக்சல வியாபார சின்னத்தின் கீழ் உற்பத்திப் பொருட்களை அறிமுகப்படுத்தி பொருட் கண்காட்சியை உயர் தரத்தில் பேணப்பட்டு பெயர் சின்னத்தின் ஊடாக எதிர்பாரக்கப்பட்ட விற்பனை இலக்கை அடைய முடிந்தது.

நவீன சந்தைக்கு ஏற்ற விதத்தில் செயற்படமுடியுமான ஊழியர்களின் தேவைப்பாடு லக்சல நிறுவனத்திற்கு இருந்தது. எனவே 40% * 60% என்ற அமைப்பில் இருந்த நிரந்தர மற்றும் ஒப்பந்த ஊழியர் படையினரில் பொருத்தமான செயலூாக்கமுள்ள ஊழியர் படையினரை கொண்டு நடாத்துவதற்கும் அவர்களுக்கு தேவையான முறையான பயிற்சியை மற்றும் ஊக்கத்தை ஏற்படுத்துவதன் ஊடாக அவர்களது வினைத்திறனை அதிகரித்து நட்புறவு கொண்ட சிறந்த நுகர்வோர் சேவையினை வழங்குவதற்கு உற்சாகமளிக்கப்பட்டது. சிறந்த

நுகர்வோர் சேவையினை வழங்கும் பொருட்டு தேவையான சகல ஆட்சேர்ப்புக்களும் ஒப்பந்த அடிப்படையில் செய்யப்பட்டன. அதற்கிணங்க, சம்பங்கள் மற்றும் கொடுப்பனவுகள் அவர்களது வினைத்திறன் மற்றும் பயனுறுதியின் அடிப்படையில் வழங்குவதன் மூலம் நிறுவனத்தின் அடிப்படை நோக்கங்களை அடைந்து கொள்வதில் அது மேலும் உதவிபுரியக்கூடும்.

## உற்பத்திப் பொருட்களை விரிவுபடுத்தல்

புதிய மூலோபாய திட்டத்தின் கீழ் நிறுவனத்தின் செயற்பாடுகளை மாத்திரமன்றி தமது விற்பனைப் பொருட்களையும் விரிவுபடுத்துவதற்கான ஏற்புடைய நடவடிக்கைகளை தேசிய அலங்கார நிலையம், தேசிய கைவினைச் சபை மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களுடன் இணைந்து தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உள்நாட்டு உற்பத்திகளின் அடையாளத்தைப் பேணிய வண்ணம் தற்போதைய சந்தைக்கு ஏற்புடைய புதிய படைப்புக்களை மிக உயர்ந்த தரத்தில் உற்பத்தி செய்து சந்தைக்கு அறிமுகப்படுத்தல் மற்றும் இந்த பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்ன வகைகளின் கீழ் மாணிக்கக் கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள், தேயிலை, வாசனைத் திரவியங்கள், தோல் பொருட்கள், பீங்கான் பொருட்கள் மற்றும் உள்நாட்டு முகமூடிகள் மற்றும் ஏனைய நினைவுச் சின்னங்கள் என்பன அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. லக்சல நிறுவனத்தினால் தனது பொருட்களின் ஊக்குவிப்பு நடவடிக்கைகளையும் அலங்காரங்களையும் அறிமுகப்படுத்துவதற்கு தனியான பிரிவொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்தப் பிரிவினால் புதிய கைப்பணிப் பொருட்கள் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட காரணத்தினால் பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்ன துறையில் புத்தாக்கங்கள் பல செய்யப்பட்டுள்ளன.




## பொருட்கள் வழங்கல் வலையமைப்பு

இந்த நிறுவனத்தின் பொருட்கள் வழங்கல் வலையமைப்பின் ஊடாக விற்பனை செய்வதற்கு தேவையான பரிசுப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் கொள்வனவு மற்றும் அவற்றின் தயாரிப்பு திட்டமிடல் தொடர்பான தரக் கட்டுப்பாடு மற்றும் நவீன அலங்காரங்களை வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. 2014 ஆம்

ஆண்டளவில் பதிவு செய்யப்பட்டிருந்த 6000 உள்நாட்டு கைப்பணியாளர்களின் எண்ணிக்கை இவ்வருடத்திற்குில் மேலும் அதிகரித்துள்ளது. புதிய சந்தை வசதிகளை விருத்தி செய்வதன் ஊடாக புதிய உற்பத்தியாளர்களுக்கு இத்துறையினுள் பிரவேசிப்பதற்கு தூண்டப்பட்டுள்ளதோடு அவர்களின் கைத்தொழிலில் பேண்தகு நிலையும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

### புதிய லக்சல காட்சியறைகளை ஆரம்பித்தல் மற்றும் திறந்து வைத்தல்

2015 ஆம் ஆண்டு பின்னவல, வாகொல்ல மிருகக்காட்சிசாலையினுள் சகல நுகர்வோர் வசதிகளையும் கொண்ட புதிய காட்சியறையொன்றை நிறுவுதல் மற்றும் தற்போதுள்ள காட்சியறைகளின் நுகர்வோர் வசதிகளை மேலும் மேம்படுத்துவதன் ஊடாக லக்சல நிறுவனம் தனது விற்பனை வலையமைப்பை மேலும் விரிவுபடுத்தி தமது விற்பனை இலக்குகளை அடைந்துகொள்வதற்கு நடவடிக்கை எடுத்தது.

### ஊழியர் படை பயிற்சியும் புதிய நியமனங்களும்

நுகர்வோர் தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ற வகையில் ஊழியர் படையின் சிறந்த மனப்பாங்குகளை கட்டியெழுப்புவதற்கான பயிற்சி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அதற்கிணங்க, அவர்களுக்கு நவீன விற்பனை மூலோபாயங்கள் பற்றிய அறிவு வழங்கப்பட்டதன் மூலம் சர்வதேச தரத்திலான தரமான நுகர்வோர் சேவையினை வழங்குவதற்கு சர்வதேச தரத்திலான உட்கட்டமைப்பு வசதிகள் மேலும் விரிவுபடுத்தபட்டது. அத்தோடு தெரிவுசெய்யப்பட்ட திறமையான ஊழியர்களுக்கு மாணிக்க கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் அதிகாரசபையின் ஒத்துழைப்புடன் மாணிக்க கற்கள் மற்றும் தங்க ஆபரணங்கள் சந்தைப்படுத்தல் பற்றிய விசேட பயிற்சி வழங்கப்பட்டது.

### இணையத்தளம் ஊடாக சந்தைப்படுத்தல் வசதிகளை பெற்றுக்கொள்ளல் (Online Sales Facilities)

லக்சல தனது பொருட்களை உலகின் எப்பாகத்திலும் வசிக்கும் தனது வாடிக்கையாளருக்கு இலத்திரணியல் வசதிகள் ஊடாக கொள்வனவுகளை செய்வதற்கான வசதியை ஏற்படுத்தும் முகமாக 2015 ஆம் ஆண்டு இணையத்தள மூலமான கொள்வனவு முறை மிகவும் பரந்துபட்ட முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

## தொழிற்பாட்டு மீளாய்வு

நிதிச் செயலாற்றுகை பொழிப்பு

மீளாய்வுக்கு உட்படும் வருடத்தினுள் லக்சல நிறுவனம் ரூபா மில்லியன் 829 மொத்த விற்பனையை பதிவு செய்தது. ஏற்புடைய விற்பனைச் செலவு ரூபா மில்லியன் 330.5 ஆக இருந்தது. பின்வரும் வரைபின் மூலம் லக்சல நிறுவனத்தின் கடந்த பத்து வருட காலப் பிரிவினுள் மேற்கொள்ளப்பட்ட தொழிற்பாடுகளின் சுருக்கம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.




மொத்த விற்பனை விற்பனைச் செலவு மொத்தச் செலவு இலாபம் / நட்டம்

வருடத்தினுள் காட்சியறைகளின் விற்பனை ரூபா மில்லியன் 829 ஆக உள்ளது. முக்கிய பங்களிப்பு வழங்கிய காட்சியறைகளாக தும்முல்லை மற்றும் நூதனசாலை காட்சியறைகள் காணப்படுகின்றன. அதாவது ரூபா மில்லியன் 347 தும்முல்லை காட்சிறையினாலும் ரூபா மில்லியன் 87.5 நூதனசாலை காட்சியறையினாலும் ஈட்டப்பட்டுள்ளது.




தும்முல்லை / கோட்டை / நூதனசாலை / கட்டுபெத்த / குதிரைப் பந்தயத் திடல் / கட்டுநாயக்க / காலி / கண்டி / வெலிபென்ன 1 / வெலிபென்ன 2 / பத்தரமுல்லை / பின்னவல / பேராதனை / வேகொல்ல / விசேட தருவித்தல்கள் / அபே கம கருத்திட்டம்

**செலவுப் பகுப்பாய்வு**

2015 ஆம் ஆண்டில் செலவுகளை குறைக்கும் உபாயமாக மொத்தச் செலவுகள் ரூபா மில்லியன் 540 வரை குறைக்கப்பட்டுள்ளதோடு, அது முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது 13% அடைவாகும்.

| | 2015 | 2014 | % |
|---|---|---|---|
| நிர்வாகச் செலவுகள் | 410,920 | 449,411 | 9% |
| விநியோகச் செலவுகள் | 57,797 | 69,945 | 21% |
| ஏற்றுமதிச் செலவுகள் | 820 | 1,077 | 31% |
| நிதிச் செலவுகள் | 71,039 | 80,622 | 13% |
| வரிச் செலவுகள் | - | 8,249 | - |
| | **540,576** | **609,307** | **13%** |

பின்வரும் வரைபின் மூலம் கடந்த வருடத்துடன் ஒப்பு நோக்கப்பட்டுள்ள மொத்தச் செலவு பற்றிய அமைப்பாகும்.




## செலவுப் பகுப்பாய்வு

நிர்வாகச் செலவுகள்

விநியோகச் செலவுகள்

எற்றுமதிச் செலவு

நிதிச் செலவு

வரிச் செலவு

## அடையப் பெற்ற நன்மைகள்

2015 ஆம் ஆண்டு லக்சல செயலாற்றுகையின் மூலம் வரி மற்றும் நிதிச் செலவினங்களுக்கு முன்னர் தேறிய இலாபமாக ரூ. 52,299,389/- பெறப்பட்டுள்ள போதிலும் விசேட மூலதன கருத்திட்டங்களுக்கு செலவிடப்பட்டுள்ள நிதிச் செலவினங்களை கருத்திற்கொள்ளும் போது ரூ. 21,453,145/- நட்டம் ஏற்பட்டுள்ளது.

மேற்படி லக்சல விற்பனை நடவடிக்கைகளின் மூலம் (நிதி மற்றும் வரிக்கு முன்னரான இலாபத்தை பெறமுடிந்துள்ளதோடு, இந்த சபையுடன் தொடர்புள்ள கைப்பணிப் பொருட்கள் வழங்குநர்களிடமிருந்து ரூ. 324,263,233/- பெறுமதியான பொருட்களை கொள்வனவு செய்ததன் மூலம் உள்நாட்டு சிறு மற்றும் நடுத்தர உற்பத்தியாளர்களின் பொருளாதாரத்தை உறுதிப்படுத்துவதற்கும் உதவ முடிந்துள்ளது.

**<u>நிர்வாகம்</u>**

நிறுவனத்தின் இலக்குகளை மற்றும் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கும் ஏனைய துணை சேவைகளை வழங்குவதற்கும் நிர்வாக மற்றும் மனிதவளப் பிரிவு நிருவாகத்திற்கு பொறுப்புக்கூற கடமைப்பட்டுள்ளது. மீளாய்வுக்குரிய வருடத்தில் மெதாத்த ஆளணியின் எண்ணிக்கை 189 ஆக இருந்தது. அதன் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**<u>2015.12.31 ஆம் திகதிக்கு மொத்த ஊழியர்கள்</u>**

| | | |
|---|---|---|
| 01. சிரேஷ்ட மட்டம் | 05 | |
| 02. இரண்டாம் மட்டம் | 12 | |
| 03. மூன்றாம் மட்டம் | 63 | |
| 04. ஆரம்ப மட்டம் | 07 | 87 |
| 05. ஒப்பந்த ஆளணியினர் | 101 | 102 |
| **மொத்தம்** | | **189** |

கடந்த வருடத்துடன் ஒப்பிட்டு நோக்கும் போது ஆளணியில் 200 இலிருந்து 189 வரை குறைவு ஏற்பட்டுள்ளது.

போட்டி நிறைந்த வியாபாரச் சு'ழலில் சிறந்த முறையில் திட்டமிட்டு குறுகிய மற்றும் மத்திய கால மற்றும் நீண்ட கால வியாபாரத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவதற்கு நன்றாக பயிற்சி பெற்று அர்ப்பணிப்புடன் பணிபுரியக்கூடிய ஊழியர் படையணியை கட்டியெழுப்புவது முக்கிய விடயமாக உள்ளது. எனவே, பயிற்சி மற்றும் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்திய வண்ணம் மனங்கவர் ஊக்குவிப்புக்

கொடுப்பனவொன்றை அறிமுகப்படுத்தி ஊழியர்களின் தரம் மற்றும் பயனுறுதியை விருத்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்போது முன்னெடுக்கப்படும் மறுசீரமைப்பு செயன்முறையின் கீழ் அத்தியவசிய ஆளணித் தொகுதியை அதிகரிக்கும் மற்றும் வகைப்படுத்தும் பணி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளது. மேலும் மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை 194 ஐக் கொண்ட புதிய நிறுவனக் கட்டமைப்புக்கு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதி கிடைக்கப்பெற்றுள்ளது. அத்தோடு மேலும் மொத்த ஆளணியின் 40% ஐ நிரந்தர ஊழியர்களைக் கொண்டும் 60% ஐ ஒப்பந்த ஊழியர்களைக் கொண்டும் நடாத்திச் செல்வதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. எனவே அதனூடாக பொறுப்புக்களை குறைத்து விற்பனை பிரிவுக்கு தேவையான பொருத்தமான ஊழியர்களை இணைத்துக்கொள்வதற்கு முடியுமாகியது.

## எமது நன்றிகள்

லக்சல நிறுவனம் சார்பாக ஆரம்பமாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிமேதகு சனாதிபதி அவர்களுக்கும் மற்றும் கௌரவ பிரதமருக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன். அத்தோடு தாவரவியல் ப்ங்கா மற்றும் பொது பொழுது போக்கு அமைச்சர் அவர்களுக்கும் கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நிறுவனத்தை உயர் நிலைக்கு கொண்டுவருவதற்கு தேவையான நடவடிக்கைகளை முன்னெடுத்து தீர்மானங்களை மேற்கொண்ட பணிப்பாளர் சபையின் அங்கத்தவர்களுக்கும் எனது கௌரவமிக்க நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், அமைச்சின் கௌரவ செயலாளர் மற்றும் தேவையான சந்தர்ப்பங்களில் நிறுவனத்தின் நன்மைக் கருதி உதவிகள் வழங்கிய அமைச்சின் ஏனைய அதிகாரிகள் மற்றும் உத்தியோகத்தர்களையும் நன்றியுனர்வுடன் நினைவு கூறுகின்றேன்.

அத்தோடு நிறுவனத்தின் நிர்வாகம், நிதி மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பாக பயனுறுதியுடன் தனது ஆளணியை வழிநடாத்திய பிரிவுத் தலைவர்களுக்கும் அத்தோடு, நிறுவனத்தின் நடவடிக்கைகளை வினைத்திறனுடன் மற்றும் பயனுறுதியுடன் முன்னெடுத்துச் செல்வதற்கு ஒத்துழைப்பு வழங்கிய ஏனைய அனைத்து ஊழியர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அவ்வாறே அடிக்கடி எமது நிறுவனத்துடன் ஒன்றிணைந்து வாடிக்கையாளர்களின் தேவைகளை இனம்கண்டு புதிய படைப்புக்களை உற்பத்தி செய்து பாரம்பரிய மற்றும் புதிய உற்பத்திகள் அடங்கிய கைப்பணிப் பொருட்கள் மற்றும் நினைவுச் சின்னங்கள் வழங்கும் கைவினைஞர்களுக்கும் எமது நிறுவனத்தின் மீது நம்பிக்கையுடன் கொடுக்கல்

வாங்கல் செய்த அன்புக்குரிய உள்நாட்டு வெளிநாட்டு வாடிக்கையாளர்களுக்கும் விசேடமாக நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

இறுதியாக இலங்கையின் கிராமிய பொருளாதாரத் துறையை வலுவு்ட்டி அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு தேவையான சகல நடவடிக்கைகளும் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படும் என்பதையும் குறிப்பிட விரும்புகின்றேன். அத்தோடு எதிர்வரும் ஆண்டில் ஒரு பில்லியன் ரூபா விற்பனை வருமானம் எதிர்பார்க்கப்படுகின்றது.

அதற்கிணங்க, 2016 ஆம் ஆண்டு சந்தைப்படுத்தல் மற்றும் விற்பனைகளை மேலும் விரிவுபடுத்துவதற்கு தேவையான நிபுணத்துவ சேவையைப் பெற்று நிறுவனத்தின் விற்பனையை மேலும் அதிகரிக்க எதிர்ப்பார்க்கின்றேன்.

மேலும், நிறுவனத்தின் பௌதீக மற்றும் மனித வளத்தை முறையாக நிர்வகித்து அனைத்து ஊழியர்களினதும் முழுமையான பங்களிப்பை வினைத்திறனுடன் மற்றும் பயனுள்ள விதத்தில் பெற்று ஒரு திட்டத்தின் அடிப்படையில் நிறுவனத்தின் பொதுப் பணிகளுக்கான செலவுகளை குறிப்பிட்டளவு விகிதத்தில் குறைத்து நிறுவனத்தின் இலாப வீதத்தை 2016 ஆம் ஆண்டில் அதிகரித்துக்கொள்வதற்கும் திட்டமிட்டுள்ளேன்.

…………………………………………

**தவிசாளர்**

## 2015 ஆம் ஆண்டு - பணிப்பாளர் சபை

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை

## சபை பணிப்பாளர்கள் - 2015.01.01

| இல | அங்கத்தவரின் பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திரு. அனில் கொஸ்வத்த | தவிசாளர் |
| 02 | திரு. தமித குமாரசிங்க | சபை அங்கத்தவர் |
| 03 | திருமதி. இரேஷா பண்டார | சபை அங்கத்தவர் |
| 04 | திரு. டபிள்யு.ஏ.டி.ராஜபக்ஷ | சபை அங்கத்தவர் |
| 05 | திரு. ரகித்த ஸ்ரீ தர்ஷன அபேகுனவர்தன | சபை அங்கத்தவர் |
| 06 | திரு. ஷாந்தி தேவ ஹேரத் | சபை அங்கத்தவர் |
| 07 | திரு. உபாலி கமகே | சபை அங்கத்தவர் |
| 08 | திரு. எஸ்.தெனியவத்த | சபை அங்கத்தவர் |

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை – லக்சல

## சபை பணிப்பாளர்கள் - 2015.02.11

| இல | அங்கத்தவரின் பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திரு ஹசித்த திலகரத்ன | தவிசாளர் |
| 02 | திரு இஸ்ஸதீன் ரியாஸ் | சபை அங்கத்தவர் |
| 03 | திரு எச்.டி.டி.பி.கே.கருணாரத்ன | சபை அங்கத்தவர் |
| 04 | திரு எஸ்.சுபைர்டீன் | சபை அங்கத்தவர் |
| 05 | திரு அபீத் காவிந்த தங்கல்ல | சபை அங்கத்தவர் |

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை – லக்சல சபை பணிப்பாளர்கள் - 2015.05.26

| இல | அங்கத்தவரின் பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | திரு அபீத் காவிந்த தங்கல்ல | தவிசாளர் |
| 02 | திரு எச்.டி.டி.பி.கே.கருணாரத்ன | சபை அங்கத்தவர் |
| 03 | திரு கீர்த்தி சுரஞ்சித் மாவெல்ல | சபை அங்கத்தவர் |
| 04 | திரு டீ.எம்.ரஞ்சித் பண்டார | சபை அங்கத்தவர் |
| 05 | திரு பீ.ஏ.லலித் விஜேசேகர | சபை அங்கத்தவர் |
| 06 | திரு பி.எச்.ஆனந்த | தவிசாளர் |
| 07 | திரு பி.ஜீ.ஜயசிங்க | சபை அங்கத்தவர் |

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை – லக்சல சபை பணிப்பாளர்கள் - 2015.11.05

| இல | அங்கத்தவரின் பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயில் | தவிசாளர் |
| 02 | திரு கீர்த்தி சுரஞ்சித் மாவெல்ல | சபை அங்கத்தவர் |
| 03 | திரு டீ.எம்.ரஞ்சித் பண்டார | சபை அங்கத்தவர் |
| 04 | திரு பீ.ஏ.லலித் விஜேசேகர | சபை அங்கத்தவர் |
| 05 | திரு பி.எச்.ஆனந்த | சபை அங்கத்தவர் |
| 06 | திரு பி.ஜீ.ஜயசிங்க | சபை அங்கத்தவர் |

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை – லக்சல

## தற்போதைய சபை பணிப்பாளர்கள்

| இல | அங்கத்தவரின் பெயர் | பதவி |
|---|---|---|
| 01 | கலாநிதி எஸ்.எம்.எம்.இஸ்மாயில் | தவிசாளர் |
| 02 | திரு ஆர்.ஏ.எல்.உதயகுமார | சபை அங்கத்தவர் |
| 03 | திரு கே.பி.எச்.விஜேவர்தன | சபை அங்கத்தவர் |
| 04 | திரு நீல் ரவீந்திர முனசிங்க | சபை அங்கத்தவர் |
| 05 | திரு எச்.ஜீ.தன்தெனிய | சபை அங்கத்தவர் |
| 06 | திரு இஸ்ஸதீன் ரியாஸ் | சபை அங்கத்தவர் |
| 07 | திரு பீ.ஜீ.ரத்நாயக்க | பணிப்பாளர் சபைக்கான ஆலோசகர் (அவதானிப்பாளர்) |

## சிரேஷ்ட முகாமைத்துவக் குழு - 2015

| | | |
|---|---|---|
| திருமதி. எல்.எம்.ஈ. பெரேரா | - | பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தர் |
| திருமதி. எஸ்.ஆர்.எம். பெரேரா | - | பணிப்பாளர் (நிதி) |
| திரு. சீ.என்.தஹநாயக்க | - | பணிப்பாளர் (மனிதவளம் மற்றும் நிர்வாகம்) |
| திரு. கே.சீ. ஜயவர்தன | - | பணிப்பாளர் (விற்பனை) |
| திரு. கே.பி.பி.எஸ்.கே.பத்திரண | - | பிரதம உள்ளக கணக்காய்வாளர் |
| திருமதி. தேவிகா குமாரி | - | பிரதிப் பணிப்பாளர் (விநியோகம்) |
| திருமதி. வஜிரா சமரரத்தன | - | பிரதிப் பணிப்பாளர் (பெறுகை) |
| திரு. சம்பத் செனெவிரத்ன | - | உதவிப் பணிப்பாளர் (உற்பத்தி அபிவிருத்தி) |
| திரு. ஜே.டி.ஹரிச்சந்திர | - | உதவிப் பணிப்பாளர் |
| திரு. ஏ.யு.டி. பெரேரா | - | கருத்திட்ட உத்தியோகத்தர் |
| திரு. ஜே.கே.டி.எஸ்.கே.ஜயநெத்தி | - | முகாமையாளர் (கையிருப்பு நிர்வாகம்) |

# நிதிக் கூற்றுக்கள்

**இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை**

**நிதி நிலமைக் கூற்று (லக்சல + கருத்திட்டம் + அபேகம )**

**2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு**

| | 2015 ரூபா | 2014 ரூபா |
|---|---|---|
| **ஆதனங்கள்** | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | **1,159,235,671** | 1,193,297,612 |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | **1,159,235,671** | 1,193,297,612 |
| காட்சி / நூதனப் பொருட்கள் | **4,984,780** | |
| பொருட்கள் வகை | **534,206,246** | 537,811,039 |
| வியாபார கடன்கள் மற்றும் ஏனைய வருமதிகள் | **135,697,121** | 156,203,978 |
| பணமும் பணத்திற்கு சமமானவைகளும் | **22,083,113** | 27,360,407 |
| நடைமுறைச் சொத்துக்கள் | **696,971,260** | 721,375,424 |
| **மொத்த சொத்துக்கள்** | **1,856,206,931** | 1,914,673,036 |
| **பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | |
| **மூலதனம் மற்றும் இருப்புக்கள்** | | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | **73,628,878** | 73,628,878 |
| மூலதன இருப்புக்கள் | **510,806** | 510,806 |
| மீள் மதிப்பு இருப்புக்கள் | **454,366,157** | 456,068,657 |
| கிடைக்கப்பெற்றுள்ள கொடைகள் | **103,951,172** | 103,951,172 |
| முன்கூட்டிய செம்மையாக்கல்கள் | **(20,009,299)** | |
| இலாபம் மற்றும் நட்டம் | **(48,017,748)** | (26,179,482) |
| **மொத்த மூலதனம் மற்றும் இருப்பு** | **564,429,967** | 607,980,031 |
| ஓய்வு்திய நலன் பொறுப்புக்கள் | **25,363,195** | 24,143,355 |
| பின்போடப்பட்ட வரி பொறுப்புகள் | **42,901,745** | 26,731,698 |
| பிற்போடப்பட்ட வருமானம் | **176,204,712** | 201,544,700 |
| கடன் | **479,542,634** | 545,144,546 |
| **நடைமுறை பொறுப்புக்கள் சாராதவை** | **724,012,287** | 797,564,299 |
| கடன் தருனர் மற்றும் சேர்ப்பு | **451,971,036** | 346,319,029 |
| இலங்கை வங்கிக் கடன் - குறுகிய கால | **110,177,581** | 152,945,098 |
| வங்கி மேலதிகப் பற்று | **5,616,061** | 9,864,580 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | **567,764,678** | 509,128,707 |
| **மொத்த முதலீட்டுப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | **1,856,206,931** | 1,914,673,036 |

.......................................

திரு ஈ.ஏ.டெலிகன்

**நிதிப் பணிப்பாளர் (பதில் கடமை)**

*கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் நிதி அறிக்கைகளின் முக்கிய அங்கமாகும். இந்த நிதி அறிக்கைகளை தயாரித்து முன்வைக்கும் பொறுப்பு பணிப்பாளர் சபைக்கு உரியது. 2016 நவம்பர் 24 ஆம் திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பணிப்பாளர் சபைக்காக ஒப்பமிடப்பட்டது.*

| | | |
|---|---|---|
| ....................................... | ....................................... | ....................................... |
| எம்.என்.என். ஆலாம் | திரு. கே.பி.ஹர்ஷ விஜேவர்தன | பேராசிரியர் எஸ்.எம்.எம்.இஸ்மாயில் |
| **பணிப்பாளர் நாயகம் /பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்** | **சபை பணிப்பாளர்** | **தவிசாளர்** |

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை
## விஸ்தீரண வருமானக் கூற்று (லக்சல + கருத்திட்டம் + அபேகம )
**2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு**

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **வருமானம்** | **813,349,529** | 881,039,134 |
| **கழிக்க :- விற்பனைச் செலவு** | **(330,350,841)** | (312,167,197) |
| **தேறிய இலாபம் / (நட்டம்)** | **482,998,688** | 568,871,937 |
| கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகள் | **25,340,000** | 25,340,000 |
| வேறு வருமானங்கள் | **10,399,200** | 22,397,613 |
| | **518,737,888** | 616,609,550 |
| **<u>கழிக்க:- செலவுகள்</u>** | | |
| நிருவாகச் செலவுகள் | **(410,920,081)** | (449,411,072) |
| விநியோகச் செலவு | **(57,796,673)** | (69,945,916) |
| ஏற்றுமதி செலவுகள் | **(820,340)** | (1,077,430) |
| **செயற்பாட்டு செலவுகளுக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | **49,200,795** | 96,175,132 |
| **கழிக்க :- நிதிச் செலவு** | **(71,039,061)** | (80,622,521) |
| **வரிக்கு முன்னரான தேறிய இலாபம் / (நட்டம்)** | **(21,838,265)** | 15,552,611 |
| வரிச் செலவுகள் | **-** | (8,249,620) |
| **வரிக்கு பின்னரான தேறிய இலாபம் / (நட்டம்)** | **(21,838,265)** | 7,302,991 |

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை

## நிதிப் பாய்ச்சல் கூற்று

### 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு

| | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **தொழிற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிப் பாய்ச்சல்** | | |
| வரிச் செலவுக்குப் பின்னர் தேறிய இலாபம் - லக்சல | **(21,838,265)** | 12,208,721 |
| **ஒப்பு நோக்கப்பட்டது** | | |
| தேய்வு | **29,309,364** | 42,571,984 |
| கடன் தீர்ப்பு | **25,478,642** | |
| ஓய்வு் திய நலன்களுக்கான பொறுப்புக்கள் | **1,219,840** | |
| பிற்போடப்பட்ட வருமானம், கூலி மற்றும் மீள் மதிப்பு | **(25,339,988)** | |
| மூலதன மாறுதல்களுக்கு முன்னர் செயற்பாட்டு இலாபம் நட்டம் | **8,829,593** | 49,874,974 |
| **வித்தியாசங்கள்** | | |
| பொருள் வகை | **(1,379,987)** | 13,449,601 |
| வியாபார மற்றும் ஏனைய வருமதிகள் | **20,506,857** | 22,618,687 |
| வியாபார மற்றும் ஏனைய கொடுப்பனவகள் | **105,652,007** | |
| பணிக்கொடைகள் | **(417,585)** | (74,526,653) |
| | **133,190,885** | 11,416,609 |
| **முதலீட்டு நடவடிக்கைகளின் நிதிப் பாய்ச்சல்** | | |
| முதலீட்டு மாறுதல்கள் | **-** | 44,862,328 |
| ஆதனம், பொறிகள் மற்றும் உபகரணங்களை கொள்வனவு செய்தல் | **(5,680,039)** | (83,676,334) |
| முதலீட்டு நடவடிக்கைகளில் பயன்படுத்திய தேறிய நிதிப் பாய்ச்சல் | **(5,680,039)** | (38,814,006) |
| **நிதி நடவடிக்கைகளின் நிதிப் பாய்ச்சல்** | | |
| நீண்டகால கடன் வசதிகள் | **(108,369,429)** | |
| பங்குரிமைகள் | **(1,702,500)** | |
| வரி பொறுப்புக்கள் | **(18,467,692)** | 46,137,374 |
| நிதி நடவடிக்கைகளில் பயன்படுத்திய மொத்த நிதிப் பாய்ச்சல் | **(128,539,621)** | 46,137,374 |
| **பணமும் பணத்திற்கு ஒப்பானவைகளினதும் தேறிய அதிகரிப்பு (குறைவு)** | **(1,028,775)** | 18,739,977 |
| **வருடத்தின் ஆரம்பத்தில் பணமும் பணத்திற்கு ஒப்பானவையும்** | **17,495,827** | (1,244,151) |
| **வருடத்தின் இறுதியில் பணமும் பணத்திற்கு ஒப்பானவையும்** | **16,467,052** | 17,495,827 |
| வங்கி மேலதிகப் பற்று | **(5,616,061)** | (9,864,580) |
| கையிலும் வங்கியிலும் உள்ள காசு | **22,083,113** | 27,360,407 |
| | **16,467,052** | 17,495,827 |

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை
## முதலீட்டுப் பங்குகளின் மாறுதல்கள் பற்றிய கூற்று
2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு

| | அளிக்கப்பட்ட மூலதனம் | மூலதனம் இருப்பு | மீள் மதிப்பு இருப்பு | கொடை | இலாப நட்டம் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | ருபா. | ருபா. | ருபா. | ருபா. | ருபா. | ருபா. |
| 2014 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | 73,628,878 | 510,806 | 456,068,657 | 103,951,172 | (33,482,474) | 600,677,039 |
| வருடத்திற்கான விரிவான வருமான அறிக்கை | | | | | | |
| வருடத்தின் மாறுதல்கள் | | | | | | |
| 2014 வருடத்தின் இலாபம் - லக்சல | | | | | 12,208,721 | |
| 2014 வருடத்தின் இலாபம் - கருத்திட்டம் | | | | | 1,375,241 | |
| 2014 வருடத்தின் இலாபம் - அபேகம | | | | | (6,280,972) | |
| 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி | 73,628,878 | 510,806 | 456,068,657 | 103,951,172 | (26,179,484) | 607,980,029 |
| **2015 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி** | **73,628,878** | **510,806** | **456,068,657** | **103,951,172** | **(26,179,484)** | **607,980,029** |
| வருடத்திற்கான மொத்த விரிவான வருமான அறிக்கை | | | | | | |
| வருடத்தின் மாறுதல்கள் | | | | | | |
| 2015 வருடத்தின் இலாபம் - லக்சல | | - | **(1,702,500)** | - | **(19,107,723)** | |
| 2015 வருடத்தின் இலாபம் - கருத்திட்டம் | | | | | **(558,535)** | |
| 2015 வருடத்தின் இலாபம் - அபேகம | | | | | **(2,172,008)** | |
| **2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **73,628,878** | **510,806** | **454,366,157** | **103,951,172** | **(48,017,749)** | **584,439,264** |
| முன்னைய ஒப்புநோக்கல் | | | | | **(20,009,299)** | |
| **2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி** | **73,628,878** | **510,806** | **454,366,157** | **103,951,172** | **(68,027,047)** | **564,429,966** |
| (முன்னைய ஒப்புநோக்கலின் பின்னர்) | | | | | | |

# நிதி நிலமை பற்றிய கூற்று - லக்சல

## 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு

| | குறிப்பு | 2015 | 2014 |
|---|---|---|---|
| | | ருபா. | ருபா. |
| **ஆதனங்கள்** | | | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 07 | **1,065,617,568** | 1,103,205,564 |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | | **1,065,617,568** | 1,103,205,564 |
| காட்சி / நூதனப் பொருட்கள் | | **4,984,780** | |
| பொருட்கள் வகை | 08 | **533,410,154** | 536,941,393 |
| வர்த்தக கடனும் ஏனைய வருமதிகளும் | 09 | **121,803,702** | 135,587,567 |
| காசும் அதனைஒத்ததும் | 10 | **20,072,708** | 27,130,271 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | | **680,271,344** | 699,659,231 |
| **மொத்த சொத்துக்கள்** | | **1,745,888,912** | 1,802,864,795 |
| **முதலீட்டுப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | | |
| **முலதனம் மற்றும் இருப்புக்கள்** | | | |
| அளிக்கப்பட்ட மூலதனம் | | **73,628,878** | 73,628,878 |
| மூலதன இருப்புக்கள் | | **510,806** | 510,806 |
| மீள் மதிப்பு இருப்புக்கள் | | **433,201,333** | 434,903,833 |
| கிடைக்கப்பெற்ற கொடைகள் | | **62,000,000** | 62,000,000 |
| முன்னரான ஒப்புநோக்கல் | | **(20,009,299)** | |
| நிறுத்திவைக்கப்பட்ட உழைப்புக்கள் | | **(119,178)** | 18,988,545 |
| **மொத்த மூலதனம் மற்றும் இருப்புக்கள்** | | **549,212,541** | 590,032,062 |
| ஓய்வு்திய நன்மைப் பொறுப்புக்கள் | | **25,363,195** | 24,143,355 |
| பிற்போடப்பட்ட வரிப் பொறுப்புக்கள் | | **38,332,909** | 26,731,698 |
| பிற்போடப்பட்ட வருமானம் | | **176,204,712** | 201,544,701 |
| கடன் | | **479,542,634** | 545,144,546 |
| **நடைமுறைப் பொறுப்புக்கள் அல்லாதவை** | | **719,443,451** | 797,564,299 |
| கடன் தருனர் மற்றும் சேர்ப்பு | 11 | **361,439,278** | 252,458,756 |
| இலங்கை வங்கிக் கடன் - குறுகிய கால | | **110,177,581** | 152,945,098 |
| வங்கி மேலதிகப் பற்று | 12 | **5,616,061** | 9,864,580 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | | **477,232,920** | 415,268,434 |
| **மொத்த முதலீட்டுப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | | **1,745,888,912** | 1,802,864,795 |

## இலங்கை கைப்பணிப் பொருட்கள் சபை
## விஸ்தீரண வருமானக் கூற்று - லக்சல
**2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு முடிவடையும் வருடத்திற்கானது**

| | குறிப்பு | 2015 | 2014 |
|---|---|---|---|
| | | ரூபா. | ரூபா. |
| வருமானம் | 01 | **778,378,722** | 823,392,392 |
| **கழிக்க :- விற்பனைச் செலவு** | | **(326,825,574)** | (304,759,116) |
| **தேறிய இலாபம் / (நட்டம்)** | | **451,553,149** | 518,633,276 |
| கிடைக்கப்பெற்ற ஏற்பாடுகள் | | **25,340,000** | 25,340,000 |
| வேறு வருமானங்கள் | 02 | **6,681,035** | 16,945,313 |
| | | **483,574,184** | 560,918,589 |
| **கழிக்க:- செலவுகள்** | | | |
| நிருவாகச் செலவுகள் | 03 | **(373,557,946)** | (398,303,091) |
| விநியோகச் செலவு | 04 | **(57,281,629)** | (60,463,600) |
| ஏற்றுமதி செலவுகள் | 05 | **(820,340)** | (1,077,430) |
| **செயற்பாட்டு செலவுகளுக்கு முன்னரான இலாபம் / (நட்டம்)** | | **51,914,269** | 101,074,467 |
| **கழிக்க :- நிதிச் செலவு** | 06 | **(71,021,992)** | (80,616,126) |
| **வரிக்கு முன்னரான தேறிய இலாபம் / (நட்டம்)** | | **(19,107,723)** | 20,458,341 |
| வரிச் செலவுகள் | | **-** | (8,249,620) |
| **வரிக்கு பின்னரான தேறிய இலாபம் / (நட்டம்)** | | **(19,107,723)** | 12,208,721 |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - லக்சல

| 01 ஆவது குறிப்பு - விற்பனை பகுப்பாய்வு | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| **லக்சல கிளைகள்** | | |
| கோட்டை | **39,739,696** | 51,579,688 |
| கண்டி | **23,340,057** | 24,123,518 |
| காலி | **55,589,884** | 57,533,096 |
| தும்முல்லை | **346,911,243** | 343,136,567 |
| கட்டுபெத்த | **20,049,867** | 25,808,935 |
| கட்டுநாயக்க | **44,555,010** | 38,094,616 |
| பத்தரமுல்லை | **28,985,526** | 37,995,011 |
| ரேஸ்கோஸ் (குதிரைப் பந்தயத்திடல்) | **11,903,656** | 16,326,372 |
| வெலிபன்ன 1 | **16,495,523** | 16,344,671 |
| நூதனநாலை | **87,540,114** | 104,381,280 |
| கே வலயம் | **-** | 2,432,282 |
| பின்னவலை | **22,282,023** | 22,512,999 |
| வெலிபன்ன 2 | **14,505,600** | 15,232,184 |
| பேராதனை | **69,721,731** | 66,297,160 |
| நேரடிச் செலவுகள் | **4,719,659** | 1,594,013 |
| வாகொல்ல | **1,987,079** | |
| | **788,326,668** | 823,392,392 |
| கழிக்க :- தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி | **(7,958,357)** | |
| பொருளாதார சேவை வரிகள் | **(1,989,589)** | |
| | **778,378,722** | 823,392,392 |

| 02 ஆவது குறிப்பு வேறு வருமானங்கள் | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| அபே கம | | |
| விசேட விற்பனை | | 1,227,946 |
| வேறு வருமானங்கள் | **7,382,462** | 15,183,481 |
| சுற்றுலா விடுதிகளை ஒதுக்குதல் | **124,319** | 128,886 |
| நானாவித வருமானம் | | 405,000 |
| | **7,506,781** | **16,945,313** |
| கழிக்க :- பெறுமதி சேர் வரி | **(825,746)** | |
| | **6,681,035** | **16,945,313** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள் - லக்சல

| 03 ஆவது குறிப்பு நிர்வாகச் செலவுகள் | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| சம்பளமும் கொடுப்பனவுகளும் | **83,536,027** | 74,830,569 |
| மேலதிக நேரம் | **7,371,592** | 10,763,631 |
| ஆலோசனைச் சேவைகள் | **1,305,000** | 52,750 |
| ஊக்குவிப்பு கொடுப்பனவு | **21,427,979** | 32,091,600 |
| போனஸ் கொடுப்பனவு | **500,000** | 3,982,038 |
| ஊ.ந.பொ.நி மற்றும் ஊ.சே.நி | **11,354,205** | 8,750,668 |
| பணிக்கொடை | **1,637,426** | 3,096,886 |
| ஊழியர் நலன்புரி | **9,538,075** | 12,201,686 |
| சீருடைகளும் அடையாள அட்டைகளும் | **826,735** | 262,770 |
| பிரயாணச் செலவு | **12,984,971** | 10,340,750 |
| ஊழியர்களின் பயிற்சிகள் | **332,588** | 491,268 |
| மருத்துவச் செலவுகள் | **1,309,155** | 1,846,186 |
| பணிப்பாளர் கட்டணங்கள் மற்றும் கூட்ட செலவுகள் | **258,400** | 1,296,017 |
| கணக்காய்வு / தொழிற்துறை கட்டணங்கள் | **320,000** | 300,000 |
| சட்ட கட்டணங்கள் | **1,074,525** | 1,741,336 |
| பிரச்சாரம் | **4,672,084** | 8,443,195 |
| பாதுகாப்புச் சேவைகள் | **22,349,452** | 26,427,156 |
| அச்சு மற்றும் காகிதாதிகள் | **3,083,098** | 5,754,413 |
| பத்திரகைகளும் வார இதழ்களும் | **2,037** | 39,787 |
| தபால் /தந்தி / ரெலெக்ஸ் | **15,549,479** | 14,267,821 |
| எரிபொருளும் உராய்வு நீக்கியும் | **1,630,305** | 2,553,113 |
| இருப்பு சரிபார்த்தல் | **192,695** | 740,447 |
| வர்த்தக அனுமதிப் பத்திர கட்டணங்கள் | | 544,784 |
| கணினி செலவுகள் | **2,767,745** | 3,769,535 |
| வாகன தரிப்பிட கட்டணங்கள் | **187,200** | 906,943 |
| வாடகையும் வரிப்பணமும் | **43,620,559** | 39,025,067 |
| காப்புறுதி | **2,131,162** | 1,298,256 |
| நீர் | **611,060** | 1,365,942 |
| மின்சாரம் | **27,551,838** | 31,852,563 |
| பழுதுபார்ப்புக்களும் பராமரிப்பும் - கட்டிடம் | **3,261,628** | 5,722,625 |
| பழுதுபார்ப்புக்களும் பராமரிப்பும் -இயந்திரம் | **1,521,840** | 1,495,742 |
| மோட்டார் வாகனங்கிளனி பொது வேலைகள் செலவு | **16,231,672** | 21,571,377 |
| தேய்மானம் | **28,997,636** | 22,909,533 |
| தேய்மானம் - கட்டிடம் | **22,960,904** | 22,309,538 |
| சுகாதார சேவைகள் | **9,155,073** | 11,596,589 |
| சுயவிருப்ப ஓய்வு பெறுகை | **1,165,560** | 1,654,846 |
| அனுசரணைக் கட்டணம் | **5,758,540** | 5,415,367 |
| திறப்பு விழா வைபவச் செலவுகள் | **6,358,320** | 6,483,080 |
| முத்திரை வரி | **21,381** | 107,220 |
| | **373,557,946** | 398,303,091 |

| 04 ஆவது குறிப்பு விநியோகச் செலவுகள் | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| தரகுக் கூலியும் கழிவுகளும் | **31,932,951** | 22,082,948 |
| அனுசரணைகள் | **2,610,697** | 6,611,428 |
| பொதிசெய்யும் பொருட்கள் - உள்நாடு | **17,240,550** | 16,311,441 |
| வியாபார ஊக்குவிப்பு | **1,436,167** | 10,500,522 |
| பழுதுபார்ப்புக்களும் பராமரிப்பும் -கொள்வனவு செய்த பொருட்கள் | **101,715** | 357,918 |
| போக்குவரத்து | **3,959,550** | 4,599,344 |
| | **57,281,629** | 60,463,600 |

| 05 ஆவது குறிப்பு ஏற்றுமதிச் செலவுகள் | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| காப்புறுதியும் கப்பல் கட்டணமும் | **764,240** | 976,719 |
| வேறு | **56,100** | 100,711 |
| | **820,340** | **1,077,430** |

| 06 ஆவது குறிப்பு நிதிச் செலவுகள | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வங்கி மேலதிகப் பற்று வட்டி | **-** | 2,052,044 |
| வங்கிக் கட்டணம் | **1,816,074** | 1,602,968 |
| கடனுக்கான வட்டி | **69,205,918** | 76,961,114 |
| | **71,021,992** | **80,616,126** |

07 ஆவது குறிப்பு - ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள்

| | காணி | கட்டிடம் | பொறிகள் மற்றும் மற்றும் உபகரணங்கள் | தளபாடங்கள் பொருத்தல்கள் | கணினி வன்பொருட்கள் மென்பொருட்கள் | பொருட்கள் வகை | நிறைவு பெறாத மூலதன வேலைகள் | குத்தகை கட்டிடங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| **செலவுகள் அல்லது பிற்போடப்பட்ட செலவுகள்** | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2014 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | 395,520,000 | 156,802,577 | 73,672,443 | 50,909,493 | 23,886,909 | 21,864,344 | 66,629,979 | 666,662 | 789,952,407 |
| கூட்டல் / மீள்மதிப்பு | | 40,576,334 | 7,945,433 | 6,038,664 | 3,724,354 | 1,707,811 | | | 59,992,596 |
| நீக்கம் | | | | | | | (21,178,589) | | (21,178,589) |
| 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி | **395,520,000** | **197,378,910** | **81,617,876** | **56,948,157** | **27,611,263** | **23,572,155** | **45,451,390** | **666,662** | **828,766,414** |
| 2015 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | 395,520,000 | 197,378,910 | 81,617,876 | 56,948,157 | 27,611,263 | 23,572,155 | 45,451,390 | 666,662 | 828,766,414 |
| கூட்டல் / மீள்மதிப்பு | | | 1,295,935 | 1,635,829 | 1,501,617 | 1,246,659 | | | 5,680,039 |
| 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி | **395,520,000** | **197,378,910** | **82,913,811** | **58,583,986** | **29,112,879** | **24,818,814** | **45,451,390** | **666,662** | **834,446,453** |
| தேய்மானம் | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2014 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | | 3,591,093 | 14,010,765 | 5,543,924 | 5,930,127 | 3,256,533 | | | 32,332,442 |
| வருடத்திற்கான அறவீடுகள் | | 4,789,567 | 6,122,026 | 4,720,709 | 3,699,652 | 3,577,579 | | | 22,909,533 |
| 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி | **0** | **8,380,660** | **20,132,791** | **10,264,633** | **9,629,779** | **6,834,112** | | | **55,241,975** |
| 2015 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | 0 | 8,380,660 | 20,132,791 | 10,264,633 | 9,629,779 | 6,834,112 | 0 | 0 | 55,241,975 |
| வருடத்திற்கான அறவீடுகள் | | 9,316,871 | 7,016,096 | 6,702,836 | 7,584,086 | 1,267,620 | | | 31,887,509 |
| 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி | **0** | **17,697,531** | **27,148,887** | **16,967,469** | **17,213,865** | **8,101,732** | | | **87,129,484** |
| முன் கொண்டுவந்த அளவு | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 2014 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | 395,520,000 | 156,802,577 | 73,672,443 | 50,909,493 | 23,886,909 | 21,864,344 | 66,629,979 | 666,662 | 789,952,407 |
| 2014 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி | **395,520,000** | **188,998,250** | **61,485,085** | **46,683,524** | **17,981,484** | **16,738,043** | **45,451,390** | **666,662** | **773,524,439** |
| 2015 சனவரி 01 ஆம் திகதிக்கு மீதி | 395,520,000 | 188,998,250 | 61,485,085 | 46,683,524 | 17,981,484 | 16,738,043 | 45,451,390 | 666,662 | 773,524,439 |
| 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்கு மீதி | **395,520,000** | **179,681,379** | **55,764,925** | **41,616,517** | **11,899,014** | **16,717,082** | **45,451,390** | **666,662** | **747,316,969** |
| **கட்டிட அபிவிருத்தி** | | | | | | | | | **376,099,550** |
| **தீர்வைகள்** | | | | | | | | | **(57,798,950)** |
| | | | | | | | | | **1,065,617,569** |

## நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புகள்

| 8 ஆவது குறிப்பு - இருப்புக்கள் | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கோட்டை | 24,119,213 | 21,171,901 |
| கண்டி | 9,599,497 | 9,822,023 |
| காலி | 31,003,829 | 25,842,625 |
| பத்தரமுல்ல | 23,558,587 | 57,567,049 |
| தும்முல்லை | 156,269,517 | 150,845,343 |
| கட்டுபெத்தை | 13,870,735 | 15,252,732 |
| கட்டுநாயக்க | 14,789,657 | 13,371,627 |
| ரேஸ் கோஸ் (குதிரைப் பந்தயத் திடல்) | 21,000,536 | 22,625,700 |
| பிரதான குதம - கட்டுபெத்தை | 9,302,195 | 5,529,841 |
| நுாதனசாலை | 146,144,000 | 148,403,088 |
| வெலிப்பன்ன 1 | 8,998,697 | 11,121,343 |
| வெலிப்பன்ன 2 | 7,455,396 | 9,469,437 |
| விசேட பொருட்கள் | 6,773,995 | |
| பேராதனை | 23,317,706 | 17,183,834 |
| பின்னவல | 8,575,252 | 8,213,926 |
| நோரீஸ் கெனல் குதம | 20,617,942 | 15,939,775 |
| கட்டுபெத்த குதம பழுதுபார்ப்பு விடயம் | 610,863 | 292,016 |
| நோரீஸ் கெனல் குதம பழுதுபார்ப்பு விடயம் | 3,880,591 | 2,294,793 |
| பின்னவலை - வாகொல்ல | 4,033,296 | 2,884,554 |
| நவீன அலங்கார நிலையம் | 707,750 | 351,750 |
| தும்முல்லை குதம | 7,788,043 | 7,824,043 |
| நொரிஸ் கெனல் குதம் வழங்குநர் திருப்புமனை | 821,521 | 164,758 |
| போக்குவரத்து பொருட்கள் | 2,456,985 | 2,809,628 |
| உற்பத்தி அபிவிருத்தி | 114,048 | 94,048 |
| குதம் விசேட கட்டளை | 313,670 | 285,298 |
| இழப்புக்கள் | (12,713,367) | (12,419,738) |
| | **533,410,154** | **536,941,393** |

| 09 ஆவது குறிப்பு - வர்த்தக கடன் பெறுநர் மற்றும் வேறு கிடைக்க உள்ளவை | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| வர்த்தக கடன் பெறுநர் | 12,474,154 | 12,733,484 |
| கிடைக்கவேண்டிய கடன் பத்திரங்கள் | 3,271,916 | 2,365,590 |
| உற்சவ கடன் | 269,800 | 154,800 |
| ஊழியர் கடன் | 870,342 | 1,374,175 |
| கிடைக்கவேண்டிய வாடகை | 1,133,557 | 2,444,304 |
| பாதுகாப்பு வைப்புக்கள் (நிறுத்தல்) | 1,799,424 | 1,799,424 |
| முன்கூட்டிய கொடுப்பனவு | 9,231,368 | 18,419,527 |
| விற்பனைப் பொருட்கள் முற்பணப் பெறுகை | 8,713,574 | 6,401,918 |
| விற்பனைப் பொருட்கள் அல்லாத முற்பணப் பெறுகை | 18,417,252 | 12,419,738 |
| நிறுத்திவைத்த தொகை | 500,000 | |
| கருத்திட்ட நடைமுறைக் கணக்குகள் | 28,382,540 | 28,053,716 |
| அபேகம கருத்திட்ட நடைமுறைக் கணக்கு | 25,660,481 | 38,047,822 |
| மீண்டும் செலுத்தவேண்டிய வைப்புக்கள் | 8,568,982 | 8,568,982 |
| விதவைகள் அனாதைகள் ஓய்வு் தியம் | 77,993 | 77,993 |
| வங்கி பிணைமுறிகள் | 2,432,321 | 2,726,095 |
| | **121,803,702** | **135,587,567** |

| 10 ஆவது குறிப்பு - காசும் அதையொத்தவைகளும் | 2015 | 2014 |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| சில்லறைக் காசு -வழங்குனர்களை புதுப்பிக்க கட்டு நிதிகள் | 252,978 | - |
### 2015 டிசம்பர் 31 ஆம் திகதியுடன் முடிவடையும் வருடம்

| | 2015<br>ரூபா |
|---|---|
| **ஆதனங்கள்** | |
| ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்கள் | 46,298,422 |
| **நடைமுறைச் சொத்துக்கள் அல்லாதவை** | 46,298,422 |
| பொருட்கள் வகை | |
| வர்த்தக கடன் பெறுநர் ஏனைய வருமதிகளும் | 31,140,299 |
| காசும் அதனை ஒத்தவைகளும் | 31,177 |
| **நடைமுறைச் சொத்துக்கள்** | 31,171,476 |
| **மொத்த சொத்துக்கள்** | 77,469,898 |
| **முதலீட்டுப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | |
| **மூலதனம் மற்றும் இருப்புக்கள்** | |
| வெளியிடப்பட்ட மூலதனம் | |
| மூலதன இருப்புக்கள் | 814,419 |
| மீள் மதிப்பு இருப்புக்கள் | 9,086,454 |
| கிடைக்கப்பெற்றுள்ள கொடைகள் | 55,336,829 |
| இலாபம் மற்றும் நட்டம் | (17,524,970) |
| **மொத்த மூலதனம் மற்றும் இருப்பு** | 47,712,732 |
| ஓய்வு்திய நலன் பொறுப்புக்கள் | |
| பின்போடப்பட்ட வரி பொறுப்புகள் | 12,345,384 |
| பிற்போடப்பட்ட வருமானம் | |
| கடன் | |
| **நடைமுறை பொறுப்புக்கள் சாராதவை** | 12,345,384 |
| கடன் தருனர் மற்றும் சேர்ப்பு | 14,475,754 |
| வங்கி மேலதிகப் பற்று | 2,936,028 |
| நடைமுறைப் பொறுப்புக்கள் | 17,411,782 |
| **மொத்த முதலீட்டுப் பங்குகள் மற்றும் பொறுப்புக்கள்** | 77,469,898 |

இந்த நிதிக் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய தயாரிக்கப்பட்டுள்ளன.

……………………………………………

திரு ஈ.ஏ.டெலிகன்
**நிதிப் பணிப்பாளர் (பதில் கடமை)**

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
## AUDITOR GENERAL'S DEPARTMENT


මගේ අංකය / எனது இல. / My No. } ටීසීඑම්/ඒ/එස්එල්එච්බී/1/03 /2015/එෆ්ඒ

ඔබේ අංකය / உமது இல. / Your No. }

දිනය / திகதி / Date } 2017 අගෝස්තු 21 දින

සභාපති,

ශ්‍රී ලංකා හස්ත කර්මාන්ත මණ්ඩලය

**ශ්‍රී ලංකා හස්ත කර්මාන්ත මණ්ඩලයේ 2015 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

මාගේ සමාංක හා 2017 මැයි 16 දිනැති ලිපියට යොමු වේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඩබ්ලිව්.ප්‍රේමනන්ද

අතිරේක විගණකාධිපති

විගණකාධිපති වෙනුවට

පිටපත්: 1. ලේකම් - කර්මාන්ත හා වාණිජ කටයුතු අමාත්‍යාංශය

2. ලේකම් - මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය


අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව, - இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை. - No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka

+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல. / My No. டீசீஎம்/ஏ/எஸ்எல்எச்பீ/1/03/2015/எவ்ஏ
මබේ අංකය / உமது இல. / Your No.
දිනය / திகதி / Date 2017 மே 16

தலைவர்,
இலங்கை கைப்பணிகள் சபை

**இலங்கை கைப்பணிகள் சபையின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

இலங்கை கைப்பணிகள் சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களது பொழிப்பினை உள்ளடக்கிய 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை இணைப்பு அதிகாரச் சட்டத்தின் 64(3) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவானதோர் அறிக்கை சபையின் தலைவருக்கு 2017 பெப்ரவரி 20 ஆந் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව. - இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.- No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka
+94-11-2887028-34 +94-11-2887223 oaggov@sltnet.lk www.auditorgeneral.gov.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வெளியிடுவது எனது பொறுப்பாகும்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் காரணமாக, நிதி நிலைமைக்கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று என்பவற்றைத் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாக ஏதேனும் செம்மையாக்கல் அவசியமாகக் காணப்பட்டதா என்பதை நான் தீர்மானிக்க முடியாதுள்ளேன்.

## 2. நிதிக் கூற்றுக்கள்

## 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்குப் போதியதும் உசிதமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற முடியாதுள்ளேன். அதன் காரணமாக, இந்நிதிக் கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை நான் தெரிவிக்கவில்லை.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை கணக்கீட்டு நியமத்துடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

#### (அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07

(i) செயற்பாட்டு நடவடிக்கைகளினால் ஆன நிகர காசுப்பாய்ச்சலில் தேய்மானத்திற்கும் காலக் கழிவுக்குமான ரூபா 2,715,230 கூட்டுத் தொகை குறைவாகச் சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

(ii) ஐந்தொகையில் நெடுங்காலப் பொறுப்பின் கீழ் சுட்டிக்காட்டப்பட பிற்போட்ட வருமானம் ரூபா 25,339,988 குறைவடைந்திருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 73(ஊ) பந்தியின் பிரகாரம் சொத்துக்கள், பொறித்தொகுதி, உபகரணங்கள் என்பன வேறொரு குறிப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட வேண்டுமாயினும், "எமது ஊர்" செயற்திட்டத்திற்குரிய ரூபா 30,580,126 நிலையான சொத்துக்கள் மற்றும் கட்டுபெத்த செயற்திட்ட பிரிவினது ரூபா 63,037,977 நிலையான சொத்துக்களது விபரம் குறிப்பு ஒன்றின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 19 இன் பிரகாரம் சபையின் பணிக்கொடைக்கான நிதியேற்பாடு தொடர்பாகக் குறிப்பு ஒன்றின் மூலம் விரிவான விளக்கமளிக்கப்பட வேண்டுமாயினும், ஆண்டின் ஆரம்ப மீதி, மீளாய்வாண்டினது நிதியேற்பாடு, ஆண்டின் போதிலான கொடுப்பனவுகள் மற்றும் இறுதி மீதி என்பவற்றை உள்ளடக்கிய விபரம் குறிப்பு ஒன்றின் மூலம் வெளிப்படுத்தப்படவில்லை.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் 04 விற்பனைக் கூடங்களிலிருந்து ரூபா 2,335,703 விற்பனைப் பெறுமதியுடைய பொருட்கள் மீளாய்வாண்டின்போது நன்கொடையாக பல்வேறு நபர்களுக்கு வழங்கப்பட்டபோதும், அப்பொருட்கள் கணக்கிலிடப்படவில்லை.

(ஆ) சபையினது கணக்குகளைத் தயாரிக்கும் கணனி மென்பொருளான SYSTEM APPLICATIONS AND PRODUCTS (SAP) என்பதன் பிரகாரம் 2015 சனவரி 31 இல் உள்ளவாறு ரூபா 781,552,673 விற்பனைப் பெறுமதியும் விற்பனை நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படும் கணனி மென் பொருளான POINT OF SALES (POS) என்பதன் பிரகாரம் விற்பனைப் பெறுமதி ரூபா 789,905,614 ஆகியமையால் ஏற்பட்ட வித்தியாசம் ரூபா 8,352,941 ஆகும். அவ் வித்தியாசத்தில் ரூபா 6,773,995 முறையற்ற நாட் குறிப்பு ஒன்றின் மூலம் விற்பனைக் கணக்கில் செலவு வைக்கப்பட்டு, கையிருப்புக் குறைவாக (NEGATIVE INVENTORY) கையிருப்பில் வரவு வைக்கப்பட்டிருந்தது. எஞ்சிய

வித்தியாசமான ரூபா 1,578,946 கணக்கிலிடப்பட்டதற்கான சான்று இருக்கவில்லை.

(இ) விற்பனைக்கல்லாத பல்வேறு கொள்வனவுகளுக்கு முற்பணமாக ரூபா 8,713,574 வழங்கப்பட்டு, அதனைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமையால், குறித்த செலவின அல்லது சொத்துக் கணக்கில் சீராக்கல்கள் மேற்கொள்ளப்படாதிருந்தன. இதனால் செலவினமும் சொத்துக்களும் குறைவடைந்து இலாபம் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஈ) கையிருப்புக் கணிப்புச் சபை அறிக்கையின் பிரகாரம், ஆண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு சீராக்கலுக்குள்ளான பொருட் கையிருப்புக் கிரயம் ரூபா 396,229,215 ஆகும். எவ்வாறாயினும், அவ்விற்பனைப் பொருட் கையிருப்பினது கிரயம் நிதி நிலைமைக் கூற்றில் ரூபா 534,591,366 ஆக, அதாவது, ரூபா 138,362,151 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) சபையின் கையிருப்புக் கணிப்புச் சபையினது அறிக்கையின் பிரகாரம், ஆண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு பழுதடைந்த மற்றும் கையிருப்புக் குறைவு என்பவற்றினது கிரயம் ரூபா 25,549,835 ஆகும். எவ்வாறாயினும், அப் பெறுமதியானது நிதிக் கூற்றுக்களில் ரூபா 12,328,247 ஆகக் கையிருப்பில் சீராக்கல் செய்யப்பட்டமையால் பழுதடைந்ததும் கையிருப்புக் குறைவு உள்ளதுமான ரூபா 13,221,588 கூட்டுத் தொகை தொடர்பாகத் தேவையான சீராக்கல் செய்யப்படவில்லை. அதற்கமைய, கையிருப்புக் குறைவு குறைவாகச் சீராக்கல் செய்யப்பட்டு, அதன் காரணமாக ஆண்டிற்கான நட்டம் அதேயளவு குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) 2008 ஆம் ஆண்டு தொடக்கம் கொடுப்பனவு செய்ய வேண்டிய வரிப் பொறுப்பாகக் காட்டப்பட்டிருக்க வேண்டிய ரூபா 42,901,745 தொகையானது 2012 ஆம் ஆண்டு தொடக்கம் மீளாய்வாண்டினது திசெம்பர் 31 வரை நிதி நிலைமைக் கூற்றில் பிற்போட்ட வரியின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக் கூற்றுக்களில் உள்ளவாறான 03 வகைச் சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேட்டு மீதியுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,345,747 வித்தியாசம் நிலவியது.

(ஆ) திறைசேரியினது செயற்பாட்டுத் திணைக்களக் கடன் மீதி உறுதிப்படுத்தல் கடிதத்தின் பிரகாரம் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான திறைசேரிக் கடன் மீதி ரூபா 4,767,000 ஆகும். எவ்வாறாயினும், அக்கடன் மீதியானது ரூபா 3,064,500 ஆக நிதிக்கூற்றுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தமையால் ஏற்பட்ட வித்தியாசம் ரூபா 1,702,500 ஆகும்.

**2.2.4 கணக்காய்விற்கான சான்றின்மை**

பின்வரும் கணக்குகளுக்கு எதிரே சுட்டிக் காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அவற்றைத் திருப்திகரமாகக் கணக்காய்வில் சான்றுறுதிப்படுத்தவோ அல்லது ஏற்றுக்கொள்ளவோ முடியாதிருந்தது.

| (அ) விடயம் | பெறுமதி ரூபா | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|
| காணியும் கட்டிடங்களும் | 655,850,917 | நிலையான சொத்துப் பதிவேடு |
| பிரதேச அபிவிருத்தி வங்கிக் கடன் | 200,000,000 | கடன் உடன்படிக்கை மற்றும் கடன் பெறுவது தொடர்பான கோவைகள் |
| வங்கி நடைமுறைக் கணக்கு – 04 | 1,042,715 | 2015 ஆம் ஆண்டிற்கான வங்கிக் கூற்றும் வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்களும் |
| கோட்டையில் உள்ள லக்சலவை நவீனமயப்படுத்தல் | 43,751,410 | கட்டிட நவீனமயப்படுத்தல் தொடர்பாக முறைப்படி பேணப்பட்ட கோவைகளும் ஆவணங்களது மூலப் பிரதிகளும். |
| கணனிகளும் | 29,112,879 | கணனிகளதும் |

6

| | | |
|---|---|---|
| துணைக்கப்பாகங்களும் | | துணைப்பாகங்களதும் பதிவேடு |
| காட்சிப் பொருட்கள் | 4,984,780 | கையிருப்பு நேரடிச் சரி, பிழை பார்த்தல் சபையினது அறிக்கைகள் |
| விற்பனைப் பொருள் கையிருப்பு | 17,815,115 | |
| ஏனைய வருமானம் | 10,399,200 | பேரேட்டுக் கணக்கு |
| குறுகிய கால வங்கிக் கடன் | 110,177,581 | கடன் பெறுதல், கொடுப்பனவுகள் தொடர்பான பதிவேடுள் |
| வியாபார மேம்பாட்டுச் செலவினம் | 477,936 | கொடுப்பனவு உறுதிச் சான்றுகளது இலக்கங்கள், காசோலைகளது இலக்கங்கள் மற்றும் மீளெதிர் பேரேட்டுக் கணக்கின் சுட்டிலக்கம். |
| சலுகைச் செலவினம் | 1,187,175 | கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் கொடுப்பனவு விபரம் என்பவற்றைக் கொண்ட கோவைகள் |
| என்டெனாவை நிர்மாணிக்காமை காரணமான இழப்பீடு | 2,000,000 | இப்பெறுமதிக்குரிய பணத்தை ஒப்பந்தக் காரரிடமிருந்து அறவிடாது முறையற்ற நாட் குறிப்பைப் பயன்படுத்தி ஏனைய வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிருந்ததுடன், வரவுக்கான குறிப்பு எவ்வாறு கணக்கிலிடப்பட்டது என்பதைக் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கவுமில்லை. |
| கடன் கொடுத்தோர் மற்றும் பணிக்கொடைச் செலவினக் கணக்கு | 600,000 | குறித்த நாட்குறிப்பும் விளக்கமும். |

(ஆ) சுவர்ன வர்ண விருது வழங்கும் விழாவின்போது உணவு வழங்குவதற்கென நூற்றுக்கு 50 சதவீத முற்பணமாக 2015 யூன் 23 ஆந் திகதியன்று ரூபா 246,675 கொடுப்பனவு உறுதிச் சான்று பயன்படுத்தப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. இக்கொடுப்பனவிற்குரிய கோவைகளும் ஆவணச் சான்றும் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படாததுடன், எஞ்சிய 50 சதவீதக் கொடுப்பனவு வழங்கப்பட்டதையோ அல்லது அதனைச் சேர்ந்து நின்ற செலவினமாகக் கணக்கிலிட்டதையோ குறிக்கும் சான்றுகளைக் கணக்காய்வில் இனங்காண முடியவில்லை.

(இ) மீளாய்வாண்டின்போது ஏனைய வருமானக் கணக்கில் செலவு வைக்கப்பட்டிராத ரூபா 3,302,729 கூட்டுத் தொகையுடைய கணனிமயப்படுத்தப்பட்ட 09 கொடுப்பனவு உறுதிச் சான்றுகள் மற்றும் 02 ஏபீ இன்வொய்சுகள் என்பவற்றைப் பயன்படுத்தி 11 சந்தர்ப்பங்களில் ஏனைய வருமானக் கணக்கில் வரவு வைக்கப்பட்டிருந்தது. செப் (SAP) கணனி நிகழ்ச்சித்திட்டத்தினூடாக கணக்கிலிடப்பட்டிருந்த இந்த வரவு வைத்தல் தொடர்பான விபரம் மற்றும் விளக்கமளித்தல் எதுவும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் அதனை உண்மையானதும், நியாயபூர்வமானதுமெனக் கணக்காய்வில் ஏற்றுக்கொள்ள முடியாதிருந்ததுடன், இவ்வாறு வரவு வைக்கப்பட்டமையால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனைய வருமானக் கணக்கில் ரூபா 1,353,596 அசாதாரண வரவு மீதி ஏற்பட்டிருந்தது.

## 2.3 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

மீளாய்வாண்டின்போது இலக்கமிடப்படாத நாட் குறிப்பு ஒன்றைப் பயன்படுத்தி ரூபா 517,380 கூட்டுத் தொகையானது பட்டோலைப் பொருட் கணக்கில் வரவு வைக்கப்பட்டும் வியாபார மேம்பாட்டுச் செலவினக் கணக்கில் செலவு வைக்கப்பட்டுமிருந்தது. எழுத்து மூல அங்கீகாரமற்ற இந் நாட் குறிப்புக்கு எழுத்து மூலம் எதுவுமே விளக்கமளிக்கப்படாததுடன், செப் (SAP) கணனி மென்பொருள் மூலம் அது கணக்கிலிடப்பட்டிருந்தது.

## 2.4 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு ரூபா 14,251,257 கூட்டுத் தொகையுடைய வர்த்தக மற்றும் ஏனைய பெற வேண்டிய மீதிகளுள் 1

ஆண்டிற்குக் குறைவான கடன் மீதிகளது கூட்டுத் தொகையான ரூபா 4,838,417 1 ஆண்டு முதல் 2 ஆண்டுகள் வரையிலான கடன் மீதிகளது கூட்டுத் தொகையான ரூபா 1,430,131, 2 முதல் 3 ஆண்டுகள் வரையிலான கடன் மீதிகளது கூட்டுத் தொகையான ரூபா 5,313,594, 3 மற்றும் அதற்கு மேற்பட்ட ஆண்டுகள் பழமை வாய்ந்த கடன் மீதிகளது கூட்டுத் தொகையான ரூபா 2,669,115 என்பன இருந்ததுடன், நிலுவையாகவிருந்த இக்கடன் மீதிகளை அறவிடுவதற்கு முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டினது இறுதித் தினத்தில் உள்ளவாறு ரூபா 323,914,121 கூட்டுத் தொகையுடைய வர்த்தக மற்றும் ஏனைய கொடுப்பனவு செய்ய வேண்டிய மீதிகளுள் 1 முதல் 2 ஆண்டுகள் வரையிலான கடன் மீதிகளது கூட்டுத் தொகையான ரூபா 72,309,032, 2 முதல் 3 ஆண்டுகள் வரையிலான கடன் மீதிகளது கூட்டுத் தொகையான ரூபா 55,124,151, 3 ஆண்டுகளும் அதற்கும் மேற்பட்ட பழமை வாய்ந்த கடன் மீதிகளது கூட்டுத் தொகையான ரூபா 6,201,122 என்பன இருந்ததுடன், நிலுவையாகவிருந்த இக்கடன் மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

**2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டத்தின் 10 மற்றும் 16 ஆம் பிரிவுகள் | 2006 முதல் 2012 வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 11,412,950 கூட்டுத் தொகையுடைய சேமலாப நிதியப் பங்களிப்புத் தொகை கொடுப்பனவு செய்யப்படவில்லை. |
| (ஆ) 1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை | பணிப்பாளர் சபை குறைந்தது 02 மாதங்களுக்கு ஒரு முறை |

| | | |
|---|---|---|
| | இணைப்பு அதிகாரச் சட்டத்தின் 40 ஆம் பிரிவினது 05 ஆம் இலக்கம் | கூட்டங்களை நடாத்த வேண்டுமாயினும், 2015 சனவரி முதல் ஏப்ரல் 16 வரை பணிப்பாளர் சபைக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| | (i) நிதிப் பிரமாணம் 371 | நிறைவேற்று தர உத்தியோகத்தர் ஒருவருக்கு வழங்கப்படக் கூடிய அதி கூடிய முற்பண வரம்பு ரூபா 20,000 ஆகும். எவ்வாறாயினும், ஒரு உத்தியோகத்தருக்கு 06 சந்தர்ப்பங்களில் அவ்வரம்பிற்கு அதிகமாக ரூபா 2,151,140 கூட்டுத் தொகை 2015 யூன் 30 வரை முற்பணமாக வழங்கப்பட்டிருந்தது. |
| | (ii) நிதிப் பிரமாணம் 387 | அரச நிறுவனங்கள் வங்கி மேலதிகப் பற்றைப் பெறலாகாது. எனினும், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 5,616,061 வங்கி மேலதிகப் பற்றாகப் பெறப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 சனவரி 25 ஆந் திகதிய ஜாபிரநி/08 ஆம் இலக்க அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவை | |
| | (i) 1.3.2 ஆம் பிரிவு | வெப் இணையதளத்தை அமைப்பதற்கான நிறுவனம் ஒன்றைத் தெரிவு செய்கையில் பொருட்கொள்வனவு |

| | |
|---|---|
| | வழிகாட்டிக்கமைய சபை நடவடிக்கைகளை மேற்கொள்ள வில்லை. |
| (ii) 2.14.1 ஆம் பிரிவு மற்றும் மேலதிகம் இலக்கம் 28 | 2015 ஆம் ஆண்டு வருடப் பிறப்பு விழாவிற்கென விற்பனை மேம்படுத்தல் நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு கூறு விலைகளைக் கோராது தனியார் நிறுவனம் ஒன்றிற்கு ரூபா 1,270,176 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. |
| (உ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| 4.2.6 ஆம் பிரிவு | செயலாற்றல் அறிக்கையைப் பணிப்பாளர் சபை மீளாய்வு செய்து, காலாண்டு முடிவடைந்து 30 நாட்கள் முடிவடைவதற்கு முன்னர் பொது முயற்சிகள் திணைக்களம் மற்றும் பொதுத் திறைசேரிக்கு அதனைச் சமர்ப்பிக்க வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |
| (ஊ) 2011 பெப்ரவரி 11 ஆந் திகதிய பீஈடீ/57 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | |
| (i) 2 ஆம் பிரிவு | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் வருடாந்த பிரசார நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டு, பொது முயற்சிகள் |

| | |
|---|---|
| | திணைக்களத்தினது அங்கீகாரத்தைப் பெறாது, ரூபா 5,225,190 பிரசார மற்றும் வியாபார மேம்பாட்டுச் செலவினமாக மீளாய்வாண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. |
| (ii) 6(iii) ஆம் பிரிவு | சலுகைச் செலவினம் (SPONSORSHIP) ரூபா 100,000 க்கு அதிகமாகுமிடத்து நிதி அமைச்சரின் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமாயினும், அவ்வாறு அங்கீகாரத்தைப் பெறாது 03 சந்தர்ப்பங்களில் ரூபா 865,000 சலுகைச் செலவினமாக வழங்கப்பட்டிருந்தது. |
| (எ) 2012 திசெம்பர் 21 ஆந் திகதிய டீஎம்எஸ்/ஜீ3/60/2 ஆம் இலக்க முகாமைத்துவச் சுற்றறிக்கையின் 02 ஆம் பந்தி | மீள் வியூகப்படுத்தலின் கீழ், அங்கீகரிக்கப்பட்ட சகல பதவிகளுக்குமான முன்மொழியப்பட்ட ஆட்சேர்ப்பு நடைமுறையைத் தயாரித்து, தேசிய சம்பள மற்றும் ஊழியர் ஆணைக்குழுவினது சிபார்சைப் பெறவேண்டுமாயினும், ஆட்சேர்ப்பு நடைமுறை தயாரிக்கப்பட்டு அதற்கான அங்கீகாரம் பெறப்படவில்லை. |
| (ஏ) 1998 யூன் 13 ஆந் திகதிய பீஈ 1/000/6 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கை | சபையின் தலைவரது உபசரிப்புச் செலவினம் மாத்திரமே மீளளிப்புச் செய்யப்படலாமெனினும், அதற்கு முரணாக உபசரிப்புச் செலவாக ரூபா. 665,000 கூட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்தது. |

| | |
|---|---|
| (ஐ) 2011 செப்டெம்பர் 15 ஆந் திகதிய பீஈடீ/58(2) ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 2 ஆம் பிரிவு | சபையின் தலைவருக்கு மாதாந்தம் ரூபா 60,000 படியாக வழங்கப்படும். எனினும், பிரதான நிறைவேற்றுதர உத்தியோகத்தராகக் கருதப்பட்டு 2015 பெப்ரவரி முதல் யூன் வரையான காலப்பகுதியின்போது மாதாந்தம் ரூபா 250,000 வீதம் ரூபா 1,107,666 கூட்டுத் தொகை படியாக வழங்கப்பட்டிருந்தது. |

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதிசார் பெறுபேறு ரூபா 21,838,265 நட்டமாகும். இதற்கெதிரான முன்னைய ஆண்டின் நிகர இலாபம் ரூபா 7,302,990 ஆகும். இதனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேறு ரூபா 29,141,255 நலிவைக் காட்டுகின்றது. 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் விற்பனை குறைவடைந்தமை, விற்பனைக் கிரயம் அதிகரித்தமை, ஏனைய வருமானம் குறைவடைந்தமை, முன்னைய ஆண்டுகளது முன்கொண்டுவரப்பட்ட வருவாய்ச் செலவினங்களுக்குச் சீராக்கல் மேற்கொள்ளப்பட்டமை என்பன மேற்படி நலிவுக்கான பிரதான காரணிகளாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 04 ஆண்டுகளினதும் நிதிப் பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில் 2011 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரை தொடர்ச்சியாக இலாபம் ஏற்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் நட்டமும் ஏற்பட்டுள்ளது. எவ்வாறாயினும், ஊழியர்களது ஊதியம், அரசிறை, நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான தேய்மானம் என்பவற்றைக் கருத்திற்கொள்ளுமிடத்து கைப்பணிகள் சபையின் பங்களிப்பு 2011 ஆம் ஆண்டில் ரூபா 103,931,453 ஆகவிருந்து பின்னர் தொடர்ச்சியான அதிகரிப்பின் மூலம் மீளாய்வாண்டில் ரூபா 114,041,422 ஆகி உள்ளதெனலாம்.

3.2 தொழிற்படு மூலதன விகிதம்

2014 ஆம் ஆண்டின்போது 0.36 ஆகவிருந்த துரித சொத்து விகிதமானது 2015 ஆம் ஆண்டளவில் 0.27 வரை, முன்னைய ஆண்டைவிட 25 சதவீத வீழ்ச்சியை அடைந்துள்ளது. துரித சொத்து விகிதம் இவ்வாறாக வீழ்ச்சி அடைவதானது சாதகமற்ற நிலைமையை நிரூபணமாக்குகின்றது. அத்துடன், அந்த விகிதம் வீழ்ச்சி அடைந்தமைக்குச் சபையின் நடைமுறைச் சொத்துக்களில் 77.3 சதவீதமான விற்பனைப் பொருள் கையிருப்பு உள்ளமை காரணமாக அமைகின்றது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

இலங்கையில் கைப்பணிப் பொருள் உற்பத்தியினது விரிவாக்கம் மற்றும் அவற்றின் தன்மையை முன்னேற்றமடையச் செய்தலும் மேம்படுத்துதலும், கைப்பணிப் பொருட்களை இலங்கையிலும் வெளிநாடுகளிலும் விற்பனைசெய்தல் மற்றும் சந்தைப்படுத்தல், மேம்படுத்துதல் மற்றும் மேற் குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதில் தேவை எனக் கருதும் சகலவற்றையும் சபை மேற்கொள்ளுதலும் சபையின் பிரதான நோக்கமாகும்.

மேற்படி நோக்கங்களை ஈடேற்றுவது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளூர்க் கைப்பணிப் பொருள் உற்பத்தியாளர்களது உற்பத்திப் பொருட்களைக் கொள்வனவு செய்வதானது 2013 ஆம் ஆண்டின் பின்னர் குறைவடைந்துள்ள போக்கு அவதானிக்கப்பட்டதுடன், 2014 ஆம் ஆண்டின்போது ரூபா 379,275,627 க்கு மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகள் 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 324,042,365 கொள்வனவுகளாகி 2015 ஆண்டின்போது உள்ளூர் உற்பத்திகளது கொள்வனவு 14.56 சதவீதம் குறைவடைந்திருந்தது.

(ஆ) உள்ளூர்ச் சந்தையில் கைப்பணிப் பொருட்களது விற்பனையைப் பரிசீலிக்கையில், 2014 ஆம் ஆண்டில் ரூபா 824,873,049 ஆகவிருந்த விற்பனைப் பெறுமதி 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 789,304,749 வரை ரூபா 35,568,300 குறைவடைந்திருந்ததுடன், வெளிநாட்டுச் சந்தையின் விற்பனையில் சிறு

முன்னேற்றமிருந்தபோதும், வெளிநாட்டுச் சந்தையில் ஈடுபடும் போக்கானது மிகக் குறைந்த மட்டத்திலேயே இருந்தது.

**4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 ஆம் ஆண்டின்போது ரூபா 20,447,738 செலவு செய்து 80 மாணாக்கருக்கு விடுதி வசதிகளை வழங்கக் கூடிய 4680 சதுர அடி மூன்று மாடி விடுதிக் கட்டிடத்தை கட்டுபெத்த தொழில்நுட்ப பயிற்சிப் பிரிவு வளாகத்தில் நிர்மாணித்தவாறிருந்தபோதும், அக்கட்டிடத்தின் கூரை நிர்மாணிக்கப்படாது 2008 ஆம் ஆண்டு தொடக்கம் வேலை நிறுத்தப்பட்டமையால் கட்டிடச் சுவர்களில் வெடிப்பு ஏற்பட்டு கட்டிடம் அழிவுக்குள்ளாகியது. அக்கட்டிடத்தைப் பாதுகாப்பதற்கும் பயனுள்ளவாறு பயன்படுத்துவதற்கும் முகாமைத்துவம் நடவடிக்கைகளை மேற்கொாள்ளவில்லை.

(ஆ) விற்பனை நடவடிக்கைகள் மற்றும் பொருட் கையிருப்பு அறிக்கையை வைத்திருப்பதற்கென POINT OF SALES (POS) எனும் பெயரிலான மற்றுமொரு கணனி மென் பொருளைச் சபை பயன்படுத்தியிருந்தது. விற்பனை மற்றும் விற்பனைப் பொருள் கையிருப்பு தொடர்பான தகவல்களை பொஸ் மூலமாக செப் SYSTEM APPLICATIONS AND PRODUCTS (SAP) மென் பொருளுக்கு மாற்றஞ் செய்யும்போது அதில் குறைபாடுகள் நிலவுவதுடன், இதன் காரணமாக NEGATIVE BILL உருவாகியுமிருந்தது. இதற்கமைய, கணனிப் பேரேட்டுக் கையிருப்புக்கும் உருப்படியான எஞ்சிய கையிருப்புக்குமிடையே தீர்க்கப்படாத வேறுபாடுகள் நிலவியதுடன், காட்சியகங்களில் உள்ள கையிருப்பு மீதியைத் திருத்துவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவுமில்லை.

(இ) 2012 நவெம்பர் 18 ஆந் திகதிய 12/1523/553/020 இலக்க அமைச்சரவைத் தீர்மானத்தின்படி, காலியில் உனவடுன எனுமிடத்தில் நிர்மாணிக்கப்பட்ட வரையறுக்கப்பட்ட லங்கா சலுசல. காலிக் கிளைக்குரிய காணி மற்றும் கட்டிடம் லக்சலவிற்குச் சட்டபூர்வமாக ஒப்படைக்கப்படுவதற்கான சிபார்சு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய, இச்சொத்துக்களைக் கொள்வனவு செய்வதற்குக் கொள்வனவுத் தொகையாக 2012 திசெம்பர் 12 ஆந் திகதியன்று ரூபா. 15,248,575 கொடுப்பனவு செய்யப்பட்டு 3 மாதங்கள் கடந்திருந்தபோதும்,

இக் காணியையும் கட்டிடத்தையும் லக்சல சட்டபூர்வமாகச் சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான கோட்டையில் உள்ள லக்சல கட்டிடம் மற்றும் காணி என்பன அரச வங்கி ஒன்றிற்கு அடகு வைக்கப்பட்டு 2011 முதல் 2015 வரையான காலப்பகுதியின்போது 10 சந்தர்ப்பங்களில் ரூபா 749,481,500 கூட்டுத் தொகை கடனாகப் பெறப்பட்டிருந்ததுடன், 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடன் நிலுவை மீதி ரூபா 265.570,182 ஆகவுமிருந்தது. அக்கடன் தொகையிலிருந்து லக்சல கட்டிடத்தை நவீனமயப்படுத்தல், எமது ஊர் வளாகத்தை நிர்மாணித்தல், பல்வேறு வெளிநாட்டுச் சுற்றுலா, முன்னைய ஆண்டுகளது கடனையும் வட்டியையும் செலுத்துதல் மற்றும் நிறுவனத்தின் செயற்பாட்டு மற்றும் நிர்வாகச் செலவினக் கொடுப்பனவு என்பன மேற்கொள்ளப்பட்டிருந்தன. நிறுவனத்தினது செயற்பாட்டு வினைத்திறமையின்மை காரணமாக மேற் குறிப்பிட்டபடி தொடர்ச்சியாகக் கடன் பெறவேண்டியதாயிற்று. அவ்வாறு பெறப்பட்ட கடன் பயனுள்ள முதலீட்டில் பயன்படுத்தப்படவில்லை. மேலும், கோட்டையில் உள்ள லக்சல நிர்மாண வேலை, எமது ஊர் நிர்மாண வேலை மற்றும் லக்சல கண்காட்சிக் கூடங்கள் சிலவற்றினது நடவடிக்கைகள் என்பன தற்போது முற்றாகக் கைவிடப்பட்டிருந்தன.

(ஆ) ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்ட 12 முகாமையாளர்கள் சபையால் செயற்படுத்தப்பட்டவாறுள்ள 14 கண்காட்சியகங்களில் 12 இல் பணியாற்றியவாறிருந்ததுடன், களஞ்சியப் பொறுப்பாளர்கள் மற்றும் ஏனைய பல்வேறு பதவிகளுக்கும் ஒப்பந்த ஊழியர்கள் சேவையில் அமர்த்தப்பட்டிருந்தனர். நேரடிப் பரிசோதனைச் சபையினரின் அறிக்கைப் பிரகாரம் ரூபா 24,383,988 கிரயமுடைய கையிருப்புக் குறைவு ஆண்டின் இறுதித் தினத்தில் உள்ளவாறு அவதானிக்கப்பட்டிருந்தது. நிறுவனத்தின் பிரதான செயற்பாட்டுப் பணிகளுக்கு ஒப்பந்த அடிப்படையில் ஊழியர்கள் சேவையில் அமர்த்தப்படுவதால் கையிருப்புகளது பாதுகாப்பு ஆபத்திற்குரிய நிலையில் இருந்தது.

(இ) கொழும்பு கோட்டை லக்சல காட்சியகத்தின் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் காரணமாக காட்சியகம் முன்னர் இருந்த அளவின் நான்கில் ஒன்றாக மட்டுப்படுத்தலுக்குள்ளாகி இருந்தது. அங்கு ஏற்பட்ட விற்பனைகளை 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின்போது ரூபா 11,839,992 வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது. விற்பனை மேம்பாட்டின் பொருட்டு பொறுப்பான உத்தியோகத்தர்கள் போதியளவு நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**4.4 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்**

2013 ஆம் ஆண்டின் பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டுடன் ஒருசேர ஆரம்பிக்கப்பட்ட எமது ஊர் செயற்திட்டமானது 2015 செப்டம்பர் 21 ஆந் திகதிய 1933/13 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானியின் மூலம் கல்வி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டிருந்தது. அதற்கமைய, 2015 திசெம்பர் தொடக்கம் எமது ஊர் செயற்திட்டத்தின் மூலம் பெறப்படும் சகல நாளாந்த வருமானமும் கல்வி அமைச்சிற்கு லக்சலவால் வழங்கப்பட்டு, 2016 திசெம்பர் மாதமளவில் ஓராண்டு முடிவடைந்திருந்தபோதும், எமது ஊர் செயற்திட்டத்திற்கான செலவினத்தை பெற்றுக்கொள்வதற்கு லக்சல நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை.

**4.5 பயன்படுத்தப்படாததும் குறைவாகப் பயன்படுத்தப்படுவதுமான சொத்துக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பாணந்துறை கெசெல்வத்தையிலுள்ள இலகு பொறியியல் பயிற்சி நிறுவனத்தில் ரூபா 3,988,500 பெறுமதியான இலகு பொறியியல் ஓராண்டுப் பயிற்சிக் கற்கை நெறிக்கு ஒரே தடவையில் 30 மாணாக்கரைப் பயிற்றுவிக்கக் கூடிய விரிவுரை மண்டபத்துடன் கூடிய கட்டிடம், ஏறக்குறைய 40 பர்ச்சஸ் காணி, லேத் இயந்திரம் அடங்கலாக இலகு பொறியியல் பயிற்சி உபகரணங்கள் 2010 ஆம் ஆண்டு முதல் 06 ஆண்டுகளுக்கும் அதிகமாக பயிற்சிக்கெனப் பயன்படுத்தப்படாது இருந்தன.

(ஆ) கடுபெத்தையில் 282, காலி வீதியில் அமைந்துள்ள 2 ஏக்கர், 24.9 பர்ச்சஸ் காணி, 11,200 சதுர அடியில் அமைந்த ஒரே தடவையில் 80 மாணாக்கரைப் பயிற்றுவிக்கக்கூடிய தச்சுவேலைத் தொழிற்சாலை மற்றும் அங்கு பொருத்தப்பட்டுள்ள இயந்திரங்கள், கல்வி கற்பிக்கும் உபகரணங்கள், 2090 சதுர அடியிலான மரப்பலகைக் களஞ்சியம் மற்றும் 40 இரு மடிப்புக் கட்டில்கள்

கொண்ட 4680 சதுர அடியில் அமைந்த இரு மாடி விடுதிகள் என்பன 2011 ஆம் ஆண்டு தொடக்கம் தச்சுத் தொழில் பயிற்சி நடவடிக்கைகள் நிறுத்தப் பட்டமை காரணமாக 05 ஆண்டுகளுக்கும் அதிகமாகப் பயன்படுத்தப்படாதிருந்தன.

(இ) 2015 ஆம் ஆண்டின்போது வாகொல்ல, வெலிபென்ன 2 காட்சியகம் மூடப்பட்டமை, பொருட்கள் நிறமிழந்தமை மற்றும் பல்வேறு பழுதுபார்ப்புத் தேவைகளின் நிமித்தம் அசைவற்ற ரூபா 3,890,800 கூட்டுத் தொகையுடைய பொருட் கையிருப்பு கட்டுபெத்தை செயற்திட்டத்தில் பயன்படுத்தப்படாது களஞ்சியப்படுத்தப்பட்டிருந்தன. விற்பனை செய்யப்பட முடியாத நிலையிருந்த இப் பொருட் கையிருப்பை விற்பனைப் பொருள் கையிருப்பிலிருந்து நீக்குவதற்கு அல்லது பழுதுபார்க்கப்படக் கூடிய பொருட்களைப் பழுதுபார்த்து விற்பனைக்காகக் காட்சியகத்திற்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 4.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2006 முதல் 2012 வரையான காலப்பகுதியின்போது ஊழியர் சேமலாப நிதியத்தை முறைப்படி செலுத்தாமையால் ரூபா 5,706,475 கூட்டுத் தொகை தண்டப் பணமாக 2015 ஆம் ஆண்டின்போது கொடுப்பனவு செய்யப்பட வேண்டியேற்பட்டது.

(ஆ) பாணந்துறை கெசெல்வத்த இலகு பொறியியல் பயிற்சிப் பிரிவை ஆக்கபூர்வமான பணிகளுக்குப் பயன்படுத்தாது மூடியிருந்ததுடன், அதன் பாதுகாப்பு மற்றும் மின்சாரச் செலவினமாக 2015 ஆம் ஆண்டின்போது ரூபா 957,512 கூட்டுத் தொகை செலவிடப்பட்டுமிருந்தது.

(இ) சபையானது பிரதேச அபிவிருத்தி வங்கியிடமிருந்து 2013 ஆம் ஆண்டின்போது பெற்றுக்கொண்ட கடனிற்கு வட்டியைச் செலுத்தாமையால் அக்கடன் வட்டித் தொகையை வங்கி மூதனமாக்கியிருந்தது. அக்கடன் வட்டித் தொகையானது மூலதனமாக்கப்பட்டதன் விளைவாக 2015 செப்டம்பர் தொடக்கம் திசெம்பர் வரையான 04 மாத காலத்திற்கு 9.8 சதவீதம், அதாவது ரூபா 453,161 மேலதிக கடன் வட்டியை வங்கிக்குச் செலுத்த வேண்டியேற்பட்டது.

(ஈ) கட்டுபெத்தை தச்சுத்தொழில் செயற்திட்டப் பிரிவுக் கட்டிடம் பயன்படுத்தப்படாதிருக்க, அலுவலகத்திற்கும் களஞ்சியத்திற்குமென கொழும்பு 10, நொரிஸ் கெனல் வீதியில் அமைந்துள்ள கட்டிடம் ஒன்று 2013 மே 15 முதல் வாடகைக்குப் பெறப்பட்டிருந்தது. அக்கட்டிடத்தின் வாடகையாக 2015 திசெம்பர் 31 வரை ரூபா 11,148,000 கூட்டுத் தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. அதனைப் பழுது பார்ப்பதற்கு ரூபா 1,350,493 செலவிடப்பட்டிருந்தது.

## 4.7 இனங்காணப்பட்ட இழப்புகள்

நிறுவனத்தின் நோக்கங்களுக்கு முரணாக ஒலிபரப்புக் கூட்டுத்தாபன என்டெனாக் கோபுரத்தை நிர்மாணிக்கும் ஒப்பந்தம் ஒன்றை 2011 செப்டம்பர் 07 ஆந் திகதி சபை பொறுப்பேற்றிருந்தது. அந்நிர்மாண வேலை ஒப்பந்தம் முறையாக நிறைவேற்றப்படாமையால் 2014 ஆம் 2015 ஆம் ஆண்டுகள் இரண்டிலும் ரூபா 4,348,041 கூட்டுத் தொகை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்பட்டிருந்தது. சபை அந்த நிர்மாண வேலைக்கான ஒப்பந்தத்தைத் தனி நபர் ஒப்பந்தகாரர் ஒருவரிடம் ஒப்படைந்திருந்ததுடன், முறைப்படி ஒப்பந்தம் நிறைவேறாமையால் கொடுப்பனவு செய்யப்படவேண்டி ஏற்பட்ட நட்டத்தை ஒப்பந்தகாரரிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவுமில்லை.

## 4.8 பதவியணியினர் நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் நிரந்தரப் பதவியணியினர் 127 ஆகும். ஒப்பந்தப் பதவியணியினர் 67 அடங்கலாக அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 194 ஆகும். தற்போது நிரந்தரப் பதவியணியில் 40 வெற்றிடங்கள் நிலவுவதுடன், 34 ஒப்பந்த அடிப்படையிலான ஊழியர்களது மிகையும் நிலவியது.

(ஆ) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளுக்கு அப்பால் அங்கீகரிக்கப்படாத 14 பதவிகளுக்கு 28 நபர்கள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

(இ) ஒப்பந்த அடிப்படையிலான 04 மதியுரையாளர் பதவிகளுக்கே சபைக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தபோதும், அங்கீகரிக்கப்பட்ட அம்மதிவுரையாளர் பதவிகளுக்குப் புறம்பாக 03 மதியுரையாளர் பதவிகளுக்கு ஆட்சேர்க்கப்பட்டமையால் மீளாய்வாண்டின்போது ரூபா 4,850,000 கூடுதலாகக் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

## 4.9 பொருட் கொள்வனவு மற்றும் ஒப்பந்தச் செயற்பாடுகள்

கொழும்பு கோட்டையிலுள்ள லக்சல தலைமை அலுவலகம் மற்றும் காட்சியகம் என்பன அமைந்துள்ள கட்டிடத்தின் நவீனமயப்படுத்தலுக்கு 2013 சனவரியில் ரூபா 136,815,008 மதிப்பீட்டில் ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது. பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 2011 சனவரி 01 ஆந் திகதிய 20 ஆம் மேலதிகத்தின் 3.2 ஆம் பிரிவின்படி திறந்த கூறு விலைக் கோரல் முறை கடைப்பிடிப்பட்டு, அமைச்சினது கொள்வனவுக் குழுவினது தீர்மானத்திற்கமைய ஒப்பந்தகாரர் தெரிவு செய்யப்படவேண்டுமாயினும், அதற்கு முரணாக, நியாயபூர்வமான காரணம் எதுவும் தெரிவிக்கப்படாது ஒப்பந்தத்தை 04 கூறுகளாக்கி திணைக்களப் பொருட்கொள்வனவுக் குழுவினது தீர்மானத்திற்கமைய ஒரே ஒப்பந்தகாரருக்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) கொள்வனவு வழிகாட்டிக் கோவையினது மேலதிகம் 20 இன் 2.8.1 (அ) பிரிவுக்கு முரணாக கோட்டை லக்சல நவீனமயப்படுத்தல் ஒப்பந்தத்தின்போது பொருட்கொள்வனவுக் குழுவினதும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவினதும் 2 குழுக்களிலும் ஒரே உத்தியோகத்தர்கள் அங்கத்தவர்களாகக் கடமையாற்றி இருந்தனர். தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவில் விடய அறிவுடைய உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பொருட்கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.4 ஆம் பந்தியின் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுக்கான பிணை முறி பெறப்படாது 04 கூறுகளுக்கும் ரூபா 25,589,959 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.8 ஆம் பிரிவின் பிரகாரம் செயலாற்றல் பிணை முறி பெறப்படாமையால் கொடுப்பனவு செய்த தொகையை அறவிட முடியாதிருந்தது.

(உ) நவீனமயப்படுத்தலின் 04 கூறுகளுக்கும் ரூபா 43,751,409 கூட்டுத் தொகை வழங்கப்பட்டிருந்தபோதும், நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகள் முடிவடையாது 2014 செப்டம்பர் தொடக்கம் ஒப்பந்தகாரர் நவீனமயப்படுத்தல் நடவடிக்கைகளைக் கைவிட்டிருந்தார்.

## 5. கணக்களிப்பொறுப்புப் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்கப் பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் நிதிக் கூற்றுக்களும் வரைவு ஆண்டறிக்கையும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், மீளாய்வாண்டினது நிதிக் கூற்றுக்கள் 2016 ஒக்டோபர் 10 ஆந் திகதியன்றே கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 கூட்டிணைந்த திட்டம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 5.1 ஆம் பிரிவின் பிரகாரம் பணிப்பாளர் சபையால் அங்கீகரிக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டத்தின் நாளது வரையான பிரதிகள் நிதியாண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் வரிசை அமைச்சு, பொது முயற்சிகள் திணைக்களம், பொதுத் திறைசேரி, கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமாயினும், அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 5.3 செயல் நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கைப் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

### 5.4 கணக்காய்வுக் குழு

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க நல்லாளுகை தொடர்பான பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவின் பிரகாரம் குறைந்தது மூன்று

மாதங்களுக்கொரு முறை கணக்காய்வுக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டுமாயினும், 2015 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வுக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படவில்லை.

### 5.5 பொருட் கொள்வனவுத் திட்டம்

2006 சனவரி 25 ஆந் திகதிய 08 ஆம் இலக்க அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2 ஆம் பந்தியின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டிற்கான பொருட் கொள்வனவுத் திட்டம் தயாரிக்கப்படவில்லை.

### 5.6 ஆண்டறிக்கையைப் பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பிரிவின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுடன் கணக்காய்வு அறிக்கைகள் மூன்று மொழிகளிலும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டுமாயினும், 2014 ஆம் ஆண்டினது ஆண்டறிக்கை 2016 திசெம்பர் 31 வரை பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

### 5.7 தீர்த்து வைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2014 அறிக்கையிலும் சுட்டிக்காட்டப்பட்டவாறான 2006 பெப்ரவரி 01 ஆந் திகதிய 06/021/234/004 இலக்கமுடைய அமைச்சரவைக் குறிப்பு மற்றும் இலங்கை கைப்பணிகள் சபை நிறுவப்பட்ட 1982 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தேசிய அருங்கலைகள் பேரவை இணைப்பு அதிகாரச் சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்டிராத பணிகளுக்கு 2014 ஆம் ஆண்டு வரை ரூபா 340.5 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின்போது ஒலிபரப்புக் கூட்டுத்தாபன என்டெனாக் கோபுரத்தை நிர்மாணிப்பதற்கு ஏற்படுத்திய உடன்படிக்கைப் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமையால் ஒலிபரப்புக் கூட்டுத்தாபன்திற்கு ரூபா 2,848,041 செலுத்தவேண்டியேற்பட்டது.

இவ்வாறாக, சர்ச்சைக்குரியதாகிய, நோக்கங்களுக்கு முரணான, சில பணிகள் பின்வருமாறு.

| | சேவை நிறுவனம் | சர்ச்சைக்குரிய பணிகள் |
|---|---|---|
| (i) | ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டே மாநகர சபை | வெலிக்கடை சிறுவர் பூங்கா மற்றும் மாநகர சபை வளாகத்தில் சூரிய ஒளி மூலம் செயற்படும் 20 மின் வெளிச்ச முறைமைகளைப் பொருத்துதல். |
| (ii) | இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் | ஒலிபரப்புக் கோபுரத்தை நிறுவுதல் |
| (iii) | நீதி அமைச்சு | சர்வதேச விடுவித்தல் நிலையத்தை நவீனமயப்படுத்தல். |

லக்சலவில் பொறியியல் கூறு ஒன்றை நிறுவுதல் மற்றும் உள்ளக, வெளியக ஒப்பந்தச் சபையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக் காரர்களிடம் ஒப்படைத்தல் மற்றும் அவை முறைப்படி நிறைவேறாமையால் மீளாய்வாண்டளவிலும் நீதிமன்ற வழக்குகளை எதிர்கொள்ளவும் பல்வேறு இழப்பீடுகளை சபை வழங்க வேண்டியுமிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின்போது வெளியாகிய முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | அவதானிப்புகள் |
|---|---|
| (அ) நிதிக் கட்டுப்பாடு | முறையான கட்டுப்பாட்டின் கீழ் நிறுவனம் நாட்குறிப்புகளை இடாமை, இலக்கமிடப்படாத நாட் குறிப்புகளை இடுதல், எழுத்து மூல அங்கீகாரமின்றி நாட் குறிப்புகளை அங்கீகரித்தல் மற்றும் கொடுக்கல் வாங்கல்களைக் கணக்கிலிடாமை, கணனிமயப்படுத்தப்பட்ட கணக்கீட்டு நடைமுறையின் மூலம் பரீட்சை மீதியையும் நிதிக் கூற்றுக்களையும் தயாரிக்காமை. |
| (ஆ) களஞ்சியக் கட்டுப்பாடு | உருப்படி சரி, பிழை பார்த்தலுக்கு 06 மாதங்களைக் கழித்தல், ஆண்டின் இறுதியில் உள்ளவாறு |

| | | |
|---|---|---|
| | | கையிருப்புக்கு மேற்கொள்ளவேண்டிய சீராக்கல் ஒவ்வொரு பொருளுக்கும் தனித் தனியாக மேற்கொள்ளப்படாமை. |
| (இ) | கையிருப்புக் கட்டுப்பாடு | காட்சியகங்களில் விற்பனைக்கென வைக்கப்பட்டுள்ள பொருட்கள் விற்பனையாகாது நெடுங்காலமாக இருப்பது அவதானிக்கப்பட்டதுடன், சில பொருட்கள் விற்பனை செய்யப்பட முடியாத நிலைக்குள்ளாகி காட்சியகத்திலிருந்து அகற்றப்பட்டு மீண்டும் புதுப்பிக்கப்பட வேண்டி ஏற்பட்டமை. |
| (ஈ) | பதவியணியினர் நிர்வாகம் | நிறுவனத்தின் பதவியணியினரில் 60 சதவீதம் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டுள்ளதுடன், அங்கீகரிக்கப்பட்ட பதவியணி சபையினது காலத்தின் தேவைக்கேற்ப நாளதுவரையாக்கப்படாமை. |
| (உ) | விற்பனை முகாமைத்துவம் | கைப்பணிப் பொருட்களது உற்பத்தி உள்ளூர் சந்தையில் நெடுங்காலமாக வீழ்ச்சி அடைந்துள்ளதுடன், வெளிநாட்டு விற்பனை தொடர்பாக நிறுவனம் மிகக் குறைந்த கவனமே செலுத்தியிருந்தமை. |
| (ஊ) | காசேட்டைப் பேணுதல் | எழுத்துமூலக் காசேட்டைப் பேணாமை, கொடுப்பனவுகளுக்குரிய பிரதி எதிர் பேரேட்டுக் கணக்கைக் காசேட்டில் குறித்துக் கொள்ளாமை மற்றும் உறுதிச் சான்றுகள் தொடர் இலக்கங்களுடன் குறித்துக் கொள்ளப்படாமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

ஒப்பம் :- எச்.எம்.காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

